Koviloor Digital Library

வருணை குலாதித்தன் மடல்

ஹிந்துமதாபிமான சங்கம்
ஓம்
காரைக்குடி

DMS0726

உ.கசுள

பதிப்பாசிரியர்

ராய. சொ.

Koviloor Digital Library

★

காந்தியும் வள்ளுவரும்

வள்ளுவர் வகுத்த அறங்களை, அவ்வகையே நடத்திக் காட்டினார் மகான் காந்தியடிகள். ஓரோவிடத்து, வள்ளுவர் அஞ்சிக் கூறிய வாக்குப் பொய்த்து விடும்படியும் செய்திருக்கிறார்.

வள்ளுவர் உலகுக்குச் சட்டம் வகுத்தார். அதற்கு உரையாகவும், உலகுக்கே ஒரு எடுத்துக்காட்டாகவும், காந்தியடிகள் நம் கண் முன்னே நடந்து காட்டினார்.

வள்ளுவர் குறளை வெண்பாவின் பிற்பகுதியாகக் கொண்டு, முற்பகுதியைப் புதிதாகப் பாடி அமைக்கப் பெற்றது இந்நூல்.

ஆசிரியர்: ராய. சொ.

விலை ரூ. க-அ-0

★

Koviloor Digital Library

வருணகுலாதித்தன் மடல்

பதிப்பாசிரியர்
ராய. சொ.

உ க ச ள

Koviloor Digital Library

விலை ரூபாய் ஒன்றரை.

கிடைக்குமிடம்:

பாரதி பிக்சர் பாலெஸ்,

காரைக்குடி.

Printed at South India Press, Karaikudi.
R/10 22-3-48 Copies 1000.

Koviloor Digital Library

நூல் முகம்

மடல் என்பது பிரபந்த வகைகளுள் ஒன்று. மடல் என்றால் என்ன என்பதைச் சொல்ல வேண்டுமல்லவா? மடல் என்ற சொல் இங்கு பனைமரத்தின் மட்டையைக் குறிக்கிறது.

பண்டைக் காலத்தில் ஒரு முறை இருந்ததாகக் கூறப்படுகிறது. ஒரு பெண்ணின் அழகில் முழுதும் ஈடுபட்டு, அவளை அடையவில்லையானால் வாழ்க்கையே பாழாகிவிடும் என்ற நிலையை ஒருவன் அடைந்துவிடுவானானல், அந் நங்கையை அவன் பெறுதற்குரிய ஒரே வழி - கடைசி வழி - மிகப் பெரிய சங்கடமான வழி மடல் ஏறுதல் என்பது. ஒருவன் ஒருத்தியைக் குறித்து மடலூர்ந்து முடித்தானானல் அவள் அவனுக்குக் கிடைத்தற்குரியாள் என்பது அக்கால வழக்காம்.

மடல் ஊர்தலாவது பனைமட்டைகளால் ஒரு குதிரை வடிவுசெய்து அதன் மீது குறிப்பிட்ட பெண்ணொருத்தியை விரும்புபவன் ஏறி, ஊரறிய வீதிவலம் வந்து மானத்தை அறவேவிட்டு இது இன்னார் பொருட்டு என்பதை விளம்பரப்படுத்துதல் ஆகும்.

“தருணமயல் தீர்வேன்; பலர் காணத் தென்நாகை வீதியிற் சென்று ஊர்வேன் பனைமா உகந்து” என இவ் வருண குலாதித்தன் மடல் இறுதியில் கூறப்படுகிறது. ‘நாகைப் பட்டின வீதியிலே சென்று பனைக் குதிரை ஏறி மகிழ்ந்து பலருங் காண என் ஆசையை நிறைவேற்றிக்கொள்வேன்’ என்பது இதன் பொருள்.

Koviloor Digital Library

மானத்தை ஆபரணமாகக் கொள்ளவேண்டிய மனிதன், மானம் துறப்பதில் இவ்வளவு துணிவென்பது எளிதில் நடக்கமுடியாதது என்று கருதியோ இக் கடின முறை கொள்ளப்பட்டது போலும்! இருந்தாலும் இன்றைய அறிவு இம் மடல் முறையை ஏற்க மறுக்கின்றது.

மடல் ஏறுதல் பற்றி ஆசிரியர் வள்ளுவர் கூறுகின்றார். காமத்துப் பாலில், நாணுத் துறவு உரைத்தல் என்ற அதிகாரத்தில், மடல்பற்றி ஆறு குறள்களில் கூறப்படுகிறது. மடல் ஊருஞ்செயல் ஆண்களுக்கேயன்றிப் பெண்களுக்குரியதன்று என்பது வள்ளுவர் கருத்து. ஒரு பெண்ணையடைய விரும்பி, மடல் ஏறும் ஆணைப்போல, ஒரு ஆணைப் பெற விழைந்து மடல் ஏறும் இயல்பு பெண்ணுக்கு இல்லை எனப் பேசுகின்றார் வள்ளுவர்.

" காமம் உழந்து வருந்தினார்க்கு ஏமம் மடல் அல்லது இல்லை வலி " என்று மொழிந்த புலவர் பெருமான், " கடலன்ன காமம் உழந்தும் மடல் ஏறாப் பெண்ணின் பெருந்தக்க தில் " எனப் பேசுகின்றார்.

காமத்தால் தாக்கப்பட்டு அலைவார்க்குப் பாது காப்பாவது மடலைத் தவிர வேறில்லை என்பது முதல் குறள் கருத்து. ஆனால் கடல் போன்ற பெருங்காம வயப்பட்டாலும் மடல் ஏறமாட்டாத பெண் இனத்தைவிடப் பெருந் தகுதி வாய்ந்த பிறப்பு எதுவுமே இல்லை என்பது இரண்டாவது காட்டிய குறளின் கருத்து. இதனால் என்னதான் நேர்ந்தாலும் ஆணைப்போல் மானத்தை விற்கப்

Koviloor Digital Library

பெண் துணியமாட்டாள் - என்பது வள்ளுவர் கருத்தாகின்றது.

திருமங்கை ஆழ்வார் என்னும் பரமபக்தர் இம் முறையில் வழுவியிருக்கின்றார். அவர் பெண்ணாக இருந்து மடல் ஏறுகின்றார். கடவுளை நாயகனுக்கி அவனை அடைய அவனைக் காதலித்த நாயகியாகிய தான், மடல் ஊர்வதாகக் கற்பனை செய்கின்றார் மங்கை மன்னர். அது இறை அன்பைக் காதல் வழியில் காட்டும் ஒரு முறை. ஆணுகிய அவரே கற்பனைப் பெண் ஆகின்றார் அன்றி அவர் உண்மைப் பெண் அல்லாதலின் வள்ளுவனார் பெண்மைச் சிறப்பை மங்கை மன்னர் கெடுத்துவிட்டார் என்று கொள்ளவேண்டாம். திருமங்கையார் பாடிய சிறிய திருமடல் பெரிய திருமடல் என்ற இரண்டு மடல்களும் வடித்த சுவை உடையன. நிற்க,

வருண குலாதித்தன் மடல் என்பது தமிழ் நாட்டின் பழம் பெரும் கடல் துறைப் பட்டினங்களுள் ஒன்ருன நாகை நகரில் நல்வாழ்வு வாழ்ந்த காத்தான் என்கின்ற வருணகுலாதித்தனைப் பாட்டுடைத் தலைவனகக்கொண்டு பாடப்பட்ட ஒரு நூல். இந் நூல் நானூற்று எழுபது கண்ணிகள் கொண்ட கலிவெண்பாவால் ஆக்கப்பெற்றது. நூல் அருமையாக அமைந்திருக்கிறது. நூல் முழுதும் கற்பனை மயம். நயமான உயர்ந்த சொற்களும் வருணனைகளும் கருத்துக்களும் எங்கும் பரவி வைர மணிகள் போல் மின்னுகின்றன. ஆனல், இதனை ஆக்கிய ஆசிரியர் யாரெனத் தெரியவில்லை. பழைய சில

Koviloor Digital Library

பதிப்புகள் பிழை மயமாகக் காணப்படுகின்றன. இந் நூலுக்குத் திருந்திய நல்ல பதிப்பு ஒன்று இதுகாறும் இல்லை. எனவே இதனைப் பதம் பிரித்து விளக்கம் எழுதி வெளியிடுகின்றேன்.

இந் நூலில் ஒரு நங்கை அடிமுதல் முடிவரை நன்கு வர்ணிக்கப்படுகின்றாள். பிறகு பாட்டுடைத் தலைவனாகிய வருண குலாதித்தனின் தசாங்கம் சிறப்பித்துக் கூறப்படுகிறது. அதன்பின் காட்சி; அதாவது அம் மெல்லியலைக் கண்டு மையல்கொள் ளும் நிலை. கண்களிற்கண்ட அவளோடு ஏதேதோ பேசுகின்றான்; பிதற்றுகின்றான் அவன். அவள் பதில் பேசவில்லை. அந் நங்கை "புன்முறுவல் செய் தருளிப் போயினள்." அன்னாள் "சிங்காரப் பின்னழ கும் சேவி"த்து, அவள் "மண்ணிலே தோய அடி வைத்த சுவடு அத்தனையும் கண்ணிலே ஒற்றி ஒற்றிக் காமுற்றான்" அவன்.

அவ் அழகி "பூங்காவில் வந்த புதுமை" அவன் "கண்ணைவிட்டு நீங்காமல்" அன்னான் "உள்ளறிவு" நீங்கப் பெற்றான். அவள் சென்றுவிட்டாள்; அவனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. தளர்ச்சி காரணமாக, சிறிது கண் அயர்ந்துவிட்டான். அந் நிலையில் "நெஞ்சில் கருணையிலா நிட்டூரி யார்தம்மை வஞ்சக் கனவில் வரக்" கண்டான் காமுகன். "செஞ்சிலம்பு - கொண்ட இருதாள் மலரைக் கும்பிட்"டான். திரும்பவும் புலப்பம் கனவில். கனவில் அம் மாது "திருவாய் மலர்ந்து நகைசெய்" யக் காண்கின்றான்; கனவிலே அனுபவிக்கின்றான்; "இந்த்ர பதம் பெற்றவர்போல் இன்புற்று" அது கனவென்று அறியாமல் விழித்தான்.

Koviloor Digital Library

அவ்வளவுதான்; காணவில்லை தன் அருமைப் பெண்ணை. "சோலையெலாம் தேடி" ஞன்; சுற்றினன்; எங்கும் காணேம். ஒன்றும் புரியவில்லை அவனுக்கு. "ஐயோ! கனவா? விழித்துக் கெடுத்துவிட்டேனே" என்று ஏங்கினன். காடும் மலையும் அவளாகத் தோற்றியது அவன் கண்களுக்கு.

அப்பொழுதுதான் அவன் உய்வுக்கு ஒரு நினைவு தோன்றுகிறது. அதுதான் மடலேறும் வழி. மடல்பற்றி மங்கையைப் பெறலாம் என்றுசொன்ன வள்ளுவரை வாயார வாழ்த்துகின்ருன். "காமம் உழந்து கலங்கி வருந்திஞர்க்கு ஏமம் மடலல்ல தில்லை வலி - ஆமெனவே", சொன்ன திருவள்ளுவரைத் தோத்திரம் செய்தேன் கருத்தில், உன்னிமடல் ஊர் தற்கு ஒருமித்தேன்" என்று கூறி மடற்கோலம் பூண்டு, அவள் திருவுருவு எழுதி எடுத்து "நற்றமிழ் நூல் சேரும் வருணகுலாதித்தன் செழுங்கனகத் தாருவெனும்" "நாத்தான் இரண்டுரையா நாகரிக" ஞன நாகையர்கோன் திருமுன்னர் அவன் தென் நாகைப்பதியின் திரு வீதியில் பனைக் குதிரைமடல் ஏறத்துணிந்தே விட்டான்.

இந்நூல் சொற்சுவை பொருட்சுவை பெரிதும் கொண்டது. எடுத்து இங்கு விரிப்பின் முன்னுரை பெருகிவிடும் என்று விடுக்கின்றேன். அவ் இன் னமுதை நூலினுள் கண்டு பருகி மகிழ்க!

காந்தி ஆண்டு எ௬.
பங்குனி - ௬௨

ராய. சொ.

Koviloor Digital Library

Koviloor Digital Library

வருண குலாதித்தன் மடல்.

விநாயகன் வணக்கம்

மாதுபுணர் காத்தான் வருணாகுலா தித்தனைச்சென்று
ஓது தமிழாம் உலாமடற்குச் - சூதுமிகர்
சந்தமுலைச் சந்த்ர நுதற் சங்கரிபுத் ரன்கருணைக்
கந்தமதத் தந்திமுகன் காப்பு.

முருகன் வணக்கம்

எங்கும்உள்ள வர்ணனைகள் எல்லாம் எடுத்தாய்ந்து
மங்கையரின் சிங்காரம் வாழ்த்தியே - எங்கள்
வருணாகுலா தித்தன் மடல்பாடு தற்குக்
கருணைபொழி ஆறுமுகன் காப்பு.

பாட்டுடைத் தலைவன் சிறப்பு

கருணைமுகி லானகொடைக் காத்தான்தென் நாகை
வருணகுலா தித்தன் மகிழ்ந்தால் - அருணமலர்ச்
செங்கைஎங்கும் சங்குதங்கும் திங்கள்பொங்கும்
கொங்கைஎங்கும் குங்குமம்தங் கும். [கங்குல்மங்கும்

---

௧. விநாயகன்வணக்கம். மாது:திருமகள். காத்தான் வருணகுலாதித்தன் பெயர். சூது:சொற்கேட்டான் ஆடுங் காய். சந்தம் : சந்தனம், சந்த்ர நுதல் : திங்கள் போன்ற நெற்றி. சங்கரி : அம்பிகை. கந்தம் : மணம். தந்தி : யானை.

௨. முருகன் வணக்கம் ஆய்ந்து : ஆராய்ந்து. சிங்காரம் : அலங்காரம்.

௩. பாட்டுடைத் தலைவன் சிறப்பு முகில் : மேகம். அருணமலர் : தாமரை. சங்கு : வளையல். திங்கள் : மதி. கங்குல் : இருள். வருண குலாதித்தன் மகிழ்ந்து மனம் வைத்தால், மங்கையரின் செங்கைகளில் வளை தங்கும்; மதிமுகம் மலரும்; மன இருள் மடியும்; கொங்கைகளில் குங்குமச்சேறு தங்கும்.

Koviloor Digital Library

Koviloor Digital Library

கலிவெண்பா

பெண்ணின் பெருமை

நீர்கொண்ட மேக நிறங்கொண்ட மேனியான்
பார்கொண்ட பாதப் பரந்தாமன் - சீர்கொண்ட

உம்பருக்கு மால்எழுப்பி ஓங்குநெடு மத்தாகச்
செம்பொற் கிரியைத் திரித்ததுவும் - அம்பரத்து

விசுமதி தூணாக மேனிமெலி வித்ததுவும்
வாசுகியை நாணா வருத்தியதும் - ஓசைஅலை

தன்னைக் கடைந்ததுவும் தண்அமுதத் தோடுதித்த
மின்னைத் தழுவியதும் எண்ணாமல் - பன்னித்

திரம்பேசும் கோவலர்பால் சென்றுபதி னாறு
யிரம்பேர் மணம்புணர்ந்தான் என்றும் - பெருங்கனக ரு

க. நீர் கொண்ட மேகம்: கடல்குடித்த முகில். பார் கொண்ட பாதம்: உலகை அளந்துகொண்ட திருவடி. பரந்தாமன்: திருமால்.

உ. உம்பர்: தேவர். மால்: மயக்கம். செம்பொற் கிரி: மேருமலை. அம்பரம்: ஆகாயம்.

ந. மதி: சந்திரன். வாசுகி: ஓர் பாம்பு.

ச. மின்: இலக்குமி. பன்னி: பத்தினி.

ரு. திரம்: வலி. (திறம் என்பது எதுகை நோக்கித் திரிந்தது) கோவலர்: இடையர். கனகம்: தங்கம்.

Koviloor Digital Library

வல்லார்க்கும் கொங்கை மடவார் முதலாய
எல்லார்க்கும் மாலாயினான் என்றும் - சல்லாபப் ௬

பிந்தைநலை மற்றோர்பால் செல்லா வசிகரிக்க
வந்துலகில் உற்பவித்த மாமாது - அந்தரத்தில்

ஓதுஇனிய மின்போல் ஒளியாமல் எப்பொழுதும்
மேதினியிற் சஞ்சரிக்கும் மின்கொழுந்து - பூதலத்தில்

பைந்தொடியார் கோலம் பகல்விளக்குப் போலாக
வந்தொரு நந்தா மணிவிளக்கு - சந்தப்

படிவம் எடுத்த பசுந்தோகை ஓகைப்
பிடிநடை அன்னத்தின் பேடை - அடிதுவக்கித் ௧௦

தங்கும் கொழுந்தென்று தள்ளாமல் ஓரிடம்போல்
எங்கும்இத் திக்கும் இளங்கரும்பு - பொங்குவெயில்

கண்டு முகம்கருகாக் கட்டுண்ணாத் தாதுநிரா
வண்டு துவையா மதுமாலை - அண்டர்பால்

சோராக் கலைகுறையாச் சுற்று முயற்களங்கம்
சேரா மறையாச் செழுந்திங்கள் - ஆராயும் ௧௩

---

௬. வல் : சூதாடுகாய். மாலாயினான் : மயக்க மடைந்தான்.

௭. வசிகரிக்க : பிடித்துக் கவர்ந்திழுக்க. மாமாது ; மடல் தலைவி. அந்தரம் : விண்.

௮. மேதினி : உலகம். மின் கொழுந்து : மின்னல் தளிர்.

௯. பைந்தொடியார், பிறபெண்கள். நந்தா : குறையாத. சந்தம்: இனிமை.

௧௦. படிவம்; வடிவு. பசுந்தோகை; பச்சைமயில் ஓகை: உவகை. பிடி: பெண்யானை.

௧௨ தாது: மகரந்தத்தூள். மது: தேன். அண்டர்: தேவர்.

Koviloor Digital Library

மைத்தவழும் தென்பால் மலையமலை யிற்பிறவாச்
சித்தசன் ஏறுஞ் சிறுதென்றல் - வைத்த கச

உலைபுகாக் காயா உருகா நிறுக்கும்
துலைபுகா மாற்றுரையாச் சொர்ணம் - அலைகடல்சூழ் கரு

வெம்பூவின் முப்பூ விளைநிலத்தின் விறடங்க
ஐம்பூ விளையும் அமிர்தநிலம் - கொம்பிரசத்து

ஆர்க்கும் எவர்க்கும் அருந்தா திருந்தாலும்
பார்க்க மயக்கும் பசுந்தேறல் - போர்க்குரிய

காமனுக்கு வச்ராங்கி காமனுக்கு நிட்சேபம்
காமனுக்கு மோகக் கருவூலம் - காமனுக்கு

மூதண்ட லோகம் முழுதும்செங் கோல்நடத்தும்
கோதண்ட தீட்சா குருபீடம் - மாதவரும்

நற்ற வரும்நிதியம் நாள்தோறும் நன்றென்று
கற்றகவி இன்பக் கலைக்ஞானம் - வெற்றிமதன் உ௦

மிதிட்ட காமநூல் வித்தைக்கு அடங்காமல்
வாதிட்ட பஞ்சவர் ணக்கிள்ளை - ஆதித்தன் உக

கச. மை: மேகம். மலையமலை: பொதிகை. சித்தசன்: மன்மதன்.

கரு துலை: தராசு.

கசு. வெம்பூ, விரும்பத்தக்க பூமி. விறு: சிறப்பு.

கஎ. தேறல்: தேன்.

கஅ. வச்ராங்கி; வைரக்கவசம்: நிட்சேபம்: புதை பொருள். கருவூலம்: பொக்கிஷம்.

ககூ. மூது: பழைய. அண்ட லோகம்: முட்டை வடிவமான உலகம்.

உ௦. நிதியம் : செல்வம். கலைக்ஞானம் : சாத்திர அறிவு.

உக. காமநூல்: மதன சாத்திரம். வாது: சண்டை. பஞ்சவர்ணம்: ஐந்து நிறம். கிள்ளை: கிளி. ஆதித்தன்: சூரியன்.

Koviloor Digital Library

பொங்குகதிர் காணாத பூங்குமுதம் கங்குலையும்
திங்களையும் காணாச் செழுங்கமலம் - எங்குநிலவு உஉ

ஆக நகைக்கும் அரம்பையரின் மேலாகைக்கும்
கோக நகைக்கும் குலதெய்வம் - பாகுமொழிப்

பண்ணும் நடையும் பழகும்ஒரு சித்திரம்போல்
நண்ணும் மதன ரசகுளிகை - வண்ண

நெடியதரு விற்படரா நீள்வல்லி தானிக்
கொடிபடராக் கற்பகப்பூங் கொம்பு - வடிவுமிகு உரு

பெண்ணுருவம் ஆகப் பிரமன் கடைந்தளித்த
மண்ணுலகம் காக்க வருமமிர்தம் - எண்ணாம்

பிறப்பிக்க மாதவத்தோர் செய்தவங்கள் எல்லாம்
துறப்பிக்க வந்தபெருஞ் சூழ்ச்சி - நிறைத்துப்

பெருகி உவட்டெடுத்த பேரின்ப வெள்ளம்
பருகில் தெவிட்டாப் பசுந்தேன் - ஒருவருக்கும்

பூணக் கிடையாத பொன்ஆரம் தூரத்தே
காணப் பரிமளிக்கும் கஸ்தூரி - நின்நிலத்தில் உசு

உஉ. கதிர்: கிரணம். பூங்குமுதம்: ஆம்பல் மலர். கங்குல்: இருட்டு. திங்கள்: சந்திரன். கமலம்: தாமரை.

உங. அரம்பையர்: தேவ மாதர். கோகநகை: திருமகள்.

உச. பண்: இசை. நடை: நடனம். நண்ணும்: பொருந்திய. மதனரச குளிகை: இன்பக் காம மாத்திரை.

உரு. தரு: மரம். வடிவு: அழகு.

உசு. துறப்பித்தல் : ஓட்டம் எடுக்கச்செய்தல். சூழ்ச்சி: தந்திரம்.

உஎ. உவட்டெடுத்தல்: தெகிட்டிவிடுதல். பருகுதல்: குடித்தல்.

உஅ. பூண: அணிந்துகொள்ள. பொன் ஆரம், தங்க மாலை. பரிமளித்தல்: மணத்தல்.

Koviloor Digital Library

கொல்லாக் கொடுங்கூற்றம் கூவாமல் கொஞ்சுகுயில்
எல்லாக் கலைக்கும் இனியமான் - உல்லாசத் ௩௦

திரு அடி

தேமேவு அனிச்சச் செழும்போது என்னும்இனிய
பூமேல் நடக்கப் பொறுமலோ - மாமேர்கத்து

அந்தமத நூல்கொண்டு அமிர்தமிலை ஆராயும்
மைந்தர் அதிமதுர வாய்ப்பட்டோ - முந்துகணைச்

செங்கைச் சிலைவேள் திருமுடியின் மேல்வைத்தோ
மங்கையர்தம் கையால் வருடியோ - பங்கம்உற

வாட்டியவா னோரை வசிகரிக்கச் செம்பஞ்சு
நீட்டியோ கோலம் சிவந்ததென - நாட்டம்

திகழ அகம்சிவந்து செம்பவளக் கொம்பும்
பகரும்எழில் இந்த்ராணி பந்தும் - புகழ்இளைஞர் ௩௫

மெத்துமதி சோர்வதற்கு விண்மதிபோ தாதென்று
சித்தசன்தான் ஆராய்ந்து செய்தமதி - பத்தும் ௩௬

---

௩௦. கொடும் கூற்றம்: பொல்லாத எமன்.

க முதல் ௩௦ கண்ணிகள் பொது வர்ணனை.

௩௧. தேமேவு: தேன்பொருந்திய. போது: பூ.

௩௨. மதநூல்கொண்டு ஆராயும் மைந்தர்: காமக்கலை வல்லார். அதிமதுரம்: மிகுந்த இனிப்பு. கணை: அம்பு.

௩௩. சிலைவேள்: வில் ஏந்திய காமன்.

௩௩. ௩௪, பங்கம் உறவாட்டிய வானோர்: தங்கள் உடம்பு கெடுமாறு வருத்தித் தவம்செயவல்ல மேலோர். வசிகரிக்க: அவர்களைக்கூட வசியப்படுத்த. செம்பஞ்சு நீட்டுதல்: திருவடிக்குப் பஞ்சினால் சாயம்நீட்டுதல். நாட்டம்: கண்.

௩௫. பவளக்கொம்பு: பவளக் குச்சி. இந்த்ராணி பந்து. அமரர் அரசன் தேவி ஆடும் பந்து.

௩௬. மெத்துமதி: மிக்க புத்தி. விண்மதி: வானப் பிறை. சித்தசன்: மதனன். பத்து: இரண்டு கால்களின் விரல்கள் பத்து.

Koviloor Digital Library

பெரிது விழையும் பெருமதன ராஜன்
சரிதம்நிறை புத்தகமும் தாங்கி - பரவியே ௧௭

ஆதிப் பிரமன் அனத்தைத் திருத்திநடை
சாதிப்பிக் கும்கமலத் தாளினாள் - மேதினியில்

பரடு

நாளை மடல்விரியும் நாளிகேரத்தின் இளம்
பாளை விரியாப் பசுங்குரும்பை - நாளும் ௧௯

---

௧௭. மதனராஜன் சரிதம் நிறை புத்தகம்: மன்மதன் பெருங்கதை நூல்.

௧௮. ஆதிப் பிரமன்: பழைய பிர்மா. அனத்தைத் திருத்தி: அன்னத்தின் நடையையும் திருத்தஞ்செய்து. சாதிப்பித்தல்: சாதிக்கும்படி செய்தல். தாள்: அடி.

௧௧ முதல் ௧௮ முடிய அவள் திருவடிச் சிறப்புக் கூறப் பட்டது. இப்படியே ஒரு நங்கையைக் கால்முதல் தலை வரை அலங்கரித்துக் கூறப்படுகிறது. அனிச்ச மலர் மேல் நடக்க ஆற்றாமலோ, காமுகர் திருவாய்ப்பட்டோ, மன்மதன் முடிமீது தாக்கியோ, வருடிய சேடியர் கை பட்டோ, செம்பஞ்சுக் குழம்பு திட்டியோ சிவந்துபோன தென்று சொல்லுமாறு பார்ப்போர் கண்களையெல்லாம் கவர்ந்து, பவளக் குச்சிகளில் பந்தைத் திரட்டிவைத்தது போன்ற விரல்களைக்கொண்டு, அப் பத்து விரல்களும் பத்துச் சந்திரர்களைப்போல் பிரகாசம்பெற்று மன்மதனின் விரிந்த காதை முழுதையும எல்லோர்க்கும் நினைப் பூட்டுவதுபோன்ற அன்னத்தின் நடையை வென்ற திருவடிகளை உடையாள் என்பது ௧௧ முதல் ௧௮ முடிய உள்ள கண்ணிகளின் கருத்து.

௧௯. மடல்: பாளை இதழ். நாளிகேரம்: தென்னை. விரியும் பருவத்தையுள்ள தென்னைப் பசுங்குரும்பை காற் குமிழுக்கு உவமை.

௧௯ முதல் ௪௨ முடியப் பரட்டின் வர்ணனை. 'பரடு' என்பது பாதத்திற்கு மேல் பூட்டு எலும்பாக அமைந்

Koviloor Digital Library

அவங்கள் புரியாது அருந்துறவோர் செய்யும்
தவங்கள் நிறுக்கும் தராசு - நவங்கொள் ௪௦
திரண்டு நிகராகி எல்லோர்க்கும் இன்பம்
திரண்ட எனஅழகு சிந்தி - மருண்டமதன்
வேதசா ரங்குமுறும் மின்னா புரத்துடனே
பாதசா ரஞ்சூழ் பரட்டினாள் - ஆதரவின்

கணைக்கால்

ஆட்சிமத ராஜவிருது அத்தனையும் ஊதாமல்
காட்சியிலே போதிக்கும் காளம்போல் - மாட்சிஇணை
மீதார் விழிக்கயலின் மேற்பாயச் சூதொட்டி
வாதாகி நிற்கும் வரால்இணைபோல் - ஊதுகுயில் ௪௫

இருக்கும் இரண்டு குமிழ்போன்றிருக்கும் உறுப்பு. அதற்குக் காற்கரண்டை என்று பெயர். கரண்டைக் கால் என்றும் சொல்லுவதுண்டு.

௪௦. இரண்டுபுறமும் இரு கரண்டை இருப்பதால் தராசு ஒப்புக்கூறப்பட்டது. அருமையான துறவிகளது தவத்தைக்கூட நிறுத்துப் பார்த்துவிடும் வலிமை கொண்ட தராசு அது. நயம்: புதுமை.

௪௧. ௪௨. மயங்கிய மதனுடைய ஆரண ரசம் பிறிடுகின்ற மின் அனைய சிலம்பணிந்த பாத ரசம் பிலிற்றும் பரட்டினை உடையாள்.

௪௩ முதல் ௪௬ முடியக் கணைக்கால் வர்ணனை. கணைக்கால் என்பது முன்குறித்த பரட்டுக்கும் முழந்தாளுக்கும் இடையே உள்ள ஓர் அவயவம்.

௪௩. காளம்: வெற்றிச் சின்னம்

௪௪. விழிக்கயல்: கண்ணாகிய கயல்மீன். சூதொட்டி: சூது தொடுத்து. வாதாகி: போருக்குத் தயாராகி. வரால் இணை: இரண்டு வரால் மீன்கள்.

Koviloor Digital Library

காள மதன்முதுகு காட்டாமல் மாட்டிபெறுந்
தோளதனிற் கட்டுநின்ற தூணிபோல் - வேளின் ௪௫

பெருந்தகணைக் காலைந்தும் பின்னிடவே மைந்தர்
கருத்தை வருத்தும் கணைக்காலாள் - ஒருத்தி

முழந்தாள்

அமையும்இலங் காபுரியில் அன்றுசென்ற தூதர்
தமையும் மருட்டுமுழந் தாளாள் - அமுதுபயில்

துடை

அங்கஅநு ராக அதிமோக சாகரத்தைச்
செங்கைஉற நீந்துகைக்காம் தெப்பமோ - இங்கிதமாய்

மட்டுப்ப டாஇளைஞர் வாஞ்சை மதயானை
கட்டுப் படும்இரண்டு கம்பமோ - தொட்டுமயல்

நாட்டுகல விக்கினிய நாடகசா லைக்கழகு
சூட்டு மணிமுகப்பின் தூண்களோ-கோட்டுஇபத்தின் ௫௦

---

௪௫. தூணி. அம்பறாத்தூணி. வேள்: மன்தன்.

௪௬. கணைக்கால் ஐந்தும் பின்னிட: அம்பின் நுனிகள் ஐந்தும் பின்னிக்கொள்ள. ஒருத்தி: ஒப்பற்ற சிதை.

௪௭. தூதர்: அனுமார். மருட்டுதல்: மயக்குதல். அமுதுபயில்: அமுதத்தில் பழகுகின்ற.

௪௮. அங்கம்: உறுப்பு. அநுராகம்: ஆசை. அதிமோகம்: பெருங்காமம். சாகரம்: கடல். துடை தெப்பத்திற்கு உவமை.

௪௯. மட்டுப்படா; கணக்கில் அடங்காத. வாஞ்சை.: பிரியம். கம்பம்: தூண். இளைஞர்களை மதயானையாகவும் துடைகளை அவ் யானைகள் கட்டும் கம்பங்களாகவும் உருவகப்படுத்தப்பட்டிருக்கின்றன. மயல்: மையல்.

௫௦. கலவி: சேர்க்கை. கோடு: கொம்பு. இபம்: யானை.

Koviloor Digital Library

சுத்தந் துதிக்கையோ சொல்உவமை என்றுஉலகோர்
சித்தத்து உதிக்கை சிறப்பித்து - மெய்த்திமிர ருக
வாரணவேள் ஒல்க்க மால்வசந்த மண்டபம்சேர்
தோரண வாழைத் துடையினுள் - தாரணியில்

அல்குல்

ஆல்இக்கு வில்வேள் அமளியிலே இவ்வுலகில்
பாலிக்கும் இந்த்ர பதமென்னச் - சீலிக்கும்
புந்திக்கு மாலுதவும் போர்மாரன் பொக்ஷமென
வந்திக்கும் பொன்ஆல வட்டம்எனச் - சிந்தித்துச்
சூழுமணி தாங்கித் துலங்குகுறங் காம்இரண்டு
வாழைஇடைச் செந்தேனை வைத்ததென-வேழமதன் ருரு
காமித்த தென்றல் கறங்கின்உரக் காரிகையார்
சேமித்து அலங்கரித்த தேரென்னப் - பூமிக்குள் ருசு

ருக. திமிரம் : இருள்.

ருஉ. வாரணம் : யானை. வேள் : காமன். ஒல்க்கமால் வசந்த மண்டபம் : கொலுவிற்றிருக்கும் பெரிய இள வேனில் மாளிகை. தாரணி : உலகம்

ருங. ஆல் : நஞ்சு. இக்கு : கரும்பு. மன்மதனது கரும்பு வில் சிலரை விஷம்போல் நலிவதால் ஆல் இக்கு வில் வேள் என்று கூறப்பட்டது. அமளி : படுக்கை. பாலித்தல் : கொடுத்தல். இந்த்ரபதம் : சுவர்க்க வாழ்வு. சீலித்தல் : ஒழுக்கத்தோடு வாழ்தல்.

ருச. புந்தி : புத்தி. மால் : மயக்கம். வந்தித்தல் : வணங்குதல்.

ருரு. மணி : ரத்னம் இழைத்த ஆபரணம். குறங்கு துடை. வேழம் : கரும்பு.

ருசு. கறங்கு : காற்றாடி. தென்றலைத் தேரோடு கூட்டுக. தென்றல் காமனின் தேர்.

Koviloor Digital Library

வன்மைமதன் நூல்ஒழிய மற்றுள நூல் பொய்எனவே
உண்மை விளக்கும் உருவமாய் - திண்மைஉடை ருஎ

மாரன் அரசொழிய மற்றோர் அரசிலையென்று
ஆரமயல் பூட்டும் அரசிலையாய் - ஈரம்

தயங்கி அமிர்தம் ததும்பி இதழ் உற்று
வயங்குபொறிப் பைந்நாகம் ஆகி - நயங்குலவி

ஓசைமணி மேகலையின் உட்கலையில் எஞ்ஞான்றும்
ஆசை பரிமளிக்கும் அல்குலாள் - ஈசர் சூo

இடை

துடியாய்ப் பிடியாய்ச் சுருதியாய் வல்லிக்
கொடியாய் இளவல்லிக் கொம்பாய் - வடிவுஅடங்கப் சூக

ருஎ. திண்மை : வலிமை.

ருஅ. மாரன் : காமன். முதல் அரசிலை என்பதை அரசு இல்லை எனக் கொள்க. இரண்டாவது அரசிலை அரசமரத்தின் இலை. அது உபமானத்தில் வந்தது. ஆர மயல் : நிறைந்த மையல்.

ருகூ. பொறி : புள்ளி. பை : படம். நாகம் : பாம்பு. குலவி : பொருந்தி.

சூo. ஓசை மணி : சலசலக்கும் முத்துக்கள். ஞான்று : பொழுது. பரிமளித்தல் : மணத்தல். ஈசர் : சிவபெருமான். அவர் கையில் வைத்திருக்கும் துடி அடுத்த கண்ணியில் வருகின்றது.

சூக. துடி : உடுக்கை. இது பறை வகைகளுள் ஒன்று; நடுப்பகுதி மிகவும் சிறுத்திருக்கும்; அது இடைக்கு ஒப்பு. பிடியாய் : கைப்பிடிக்குள் அடங்குவதாய். சுருதியாய் : ஒலி போன்ற மென்மையுடையதாய். வடிவு அடங்க : அழகெலாம் ஒருசேர.

Koviloor Digital Library

பண்ணிச் சமைத்தஅயன் பாதாதி கேசமெல்லாம்
கண்எச்சில் என்று கருதியே - வண்ணமலர்த் ௬௨

தேமருவும் அல்குல்எனும் தென்றல் செழுந்தேரில்
மாமதனன் நின்ற வடிவம்என - நாமருவு

மாதுவினை யாடுமுது வாய்ப்புலவர் சொற்பயன்போல்
ஈதுதெரி யுந்தெரியா தென்னலாய் - மூதறிவிற்

பண்டைமொழி யிற்குறித்த பாவலரே போல்எவரும்
உண்டில்லை என்றும் உரைக்கிசைந்து-மண்டலத்தில்௬௫

---

௬௨. பண்ணி - சமைத்த : மிமிசை, அதாவது, ஒருபொருள் இருசொல்; செய்த என்பது பொருள். அயன் : பிரமன். பாதாதி கேசம் : உள்ளங்கால் முதல் உச்சி முடிய. கண் எச்சில் என்று கருதியே : கண்பட்ட எச்சில் என நினைத்தே. மற்றைய அங்கங்கள் அனைத்தும் கண் எச்சில் ஆகிவிட்டதால் கண் எச்சில் படாமல் - கண்ணுக்குத் தோற்றுததாக இடையை வகுத்தான படைப்புக் கடவுள் என்பது கருத்து. வண்ணம் : அழகு.

௬௩. தே மருவு : தேன் ததும்பும். நா மருவு : நாவில் பொருந்திய.

௬௪. மாது : கலைமகள். முதுவாய்ப் புலவர் : தேறிய வாயை உடைய பண்டிதர். ஈது தெரியும் தெரியாது என்னலாய் : இடை தெரியும் என்று சிலர் சொல்ல, இல்லை; அது தெரியவே இல்லை எனச் சிலர் செப்புகின்றார்.

௬௫. உண்டில்லை என்னும் உரைக்கு இசைந்து : சிலர் இடை உண்டு என்று உரைக்கின்றார்; வேறு சிலர் இடையே இல்லை என இயம்புகின்றார். இரண்டு உரைக்கும் இசைவாக இருக்கின்றது இடை. "பல்லியல் நெறியிற் பார்க்கும் பரம்பொருள் என்னயார்க்கும், இல்லை உண்டு என்ன நின்ற இடையினுக்கு இடுக்கண் செய்தார்" எனப் பேசுகின்றார் கவிச் சக்கரவர்த்தி.

Koviloor Digital Library

மாத்தானை காத்தான் வருணாகுலா தித்தனைச்சென்று
ஏத்தார்போல் தேய்ந்த இடையினாள் - நீத்துச் ௬௬

உந்தி

செழித்துவாழ் இல்லறத்தைத் தீதென்பார் நெஞ்சைச்
சுழித்துவாங்கு உந்திச் சுழியாள் - விழித்தெதிரே

வயிற்று மயிர் ஒழுங்கு

உற்றமால் பூட்டும் உதரவட பத்திரத்தில்
கொற்றமால் பள்ளிகொண்ட கோலமோ - வெற்றிமதன்
செங்கைச் சிலைநாணோ செங்கோலோ கொங்கைஎனும்
துங்கக் களிற்றின் துதிக்கையோ - குங்குமஞ்சேர் ௬௯

---

௬௬. மா தானை : பெரும் சேனை. ஏத்தார் போல் : வணங்காதாரைப் போல. வருணாகுலாதித்தனை வாழ்த்தாதார் தேய்வதுபோல இடை தேய்ந்தது என்பது சிறந்த கருத்து நயம் கொண்டது.

௬௭. செழிப்புடைய இல்வாழ்வை விரும்பாதார் உள்ளத்தைச் சுழற்றி இழுக்கும் உந்திச் சுழியுடையாள். "அறன் எனப் பட்டதே இல் வாழ்க்கை" அல்லவா. உந்திச் சுழி : கொப்பூழ்

௬௮. மால் பூட்டும் : மயக்கம் கொடுக்கும். உதர வட பத்திரம் : வயிறு ஆகிய ஆல் இலை. கொற்றமால் : வெற்றித்திருமால். கோலம் : அழகு. வயிறு ஆலிலையாகவும் அதன் நடுவே உள்ள மயிர் ஒழுங்கு ஆலிலை மத்தியில் நெடுமால் பள்ளி கொண்டது போலவும் தோற்றம் அளிக்கின்றன.

௬௯. சிலை நாண் : வில்லில் கட்டும் கயிறு. செங்கோல் : நேரான கம்பு. கொங்கை யானையின் மஸ்தகத்துக்கு ஒப்புரைக்கப்பட்டது. மயிரொழுங்கு அவ் யானையின் துதிக்கை. களிறு : யானை.

Koviloor Digital Library

பொற்புமுலை யாம்இரட்டைப் புண்டரிகப் போதரும்பி
நற்புதுமை காட்டும்ஒரு நாளமோ - அற்புதவேள் ௭௦
ஆர்க்கும் திருநாளுக்கு அல்குல்தேர் பின்ஓட்டம்
பார்க்கப் பிணித்த பணிவடமோ - நீர்க்குமிழி
ஏந்தும்இரு கொங்கை இளநீர் கலந்தணிந்த
சாந்து புழுகுஒழுகும் தாரையோ - மாந்தர்மருள்
உச்சாய மாம்இடைக்கும் உபயமாமுலைக்கும்
அச்சாய் நிறுத்தியநா ராசமோ - கச்சாரம்
வல்லாஞ் சிறந்தமுலை மால்வரையின் மாதவத்தோர்
தன்நெஞ்சை ஏற்றுமொரு சாரமோ - கன்னிப்
புளகஅபி ராமப் பொருவருகெம் பீரக்
களபமுலைச் செவ்விளநீர்க் காம்போ - வளமையினால் ௭௫

௭௦. பொற்பு : அழகு. புண்டரிகம் : தாமரை. போது : மலர். நாளம் : கொடி. இரண்டு மலர் அரும்பிய ஒரு கொடி போன்றிருக்கிறது உரோம வரிசை.

௭௧. பிணித்த : கட்டிய. வடம் : கயிறு.

௭௨. சாந்து : சந்தனம். புழுகு : புனுகு. தாரை : ஒழுங்கு.

௭௩. உச்சாயம் : சிறப்பு. உபயமாமுலை : இரு பெரும் தனங்கள். நாராசம் : இரும்பினால் செய்யப்பட்ட அம்பு. இடைக்கும் தனங்கட்கும் இடையே பொருத்தி நிறுத்தப்பட்ட அச்சுப் போன்றிருக்கின்றது, மயிர் வரிசை. கச்சு : ரவிக்கை. ஆரம் : மாலை.

௭௪. மால் வரை : பெரிய மலை. சாரம் : ஏணி

௭௫. புளகம் : மயிர்ச் சிலிர்ப்பு. அபிராமம் : மனத்திற்கு இனிமைதரல். பொருவரு : ஒப்பற்ற. கெம்பீரம் : பெருமிதமான தோற்றம். களபம் : வாசனைத் திரவியம். வளமை : வளப்பம்.

Koviloor Digital Library

என்றிரண்டு கொங்கைக்கு இடைவெளியைநோக்குகின்ற
கண்ணிரண்டின் பத்திக் கதிரொழுங்கோ - எண்ணிஎண்ணிப்

பார்க்கும் பொழுதில் பலகோடி சொல்உவமைக்கு
ஏற்கும் சிறுரோம ரேகையாள் - நீர்க்கயத்துச்

கொங்கை

சீதவன சத்தரும்பைச் செப்பலாம் அவ்அரும்பு
ஆதவனைக் கண்டால் அலருமே - சூதாடு

வட்டென்று உவமை மதிக்கலாம் வட்டதனை
வெட்டென்று சொல்ல விதிஉண்டே - நெட்டுடலச்

சக்கரவா கத்தைச் சரிஉரைக்க லாம்அதுவும்
மிக்க பெருகுடைத்தாய் விட்டதே - ஒக்குமெனப் ௮௦

பாரப் பருவநலப் பச்சிளநீர் என்னலாம்
ஆரப் புளகம் அரும்பாதே - வீரமதன்

வண்ணமுடி என்று மதிக்கலாம் அம்மகுடம்
தண்ணெனவும் வெச்செனவும் தாராதே - பண்ணரிய

---

௭௬. பத்தி : வரிசை. கதிர் : ஒளி.

௭௭. ரேகை : கோடு. கயம் : தடாகம்.

௭௮. சீதம் : குளிர்ச்சி. வனசத்து அரும்பு : தாமரை மொட்டு. ஆதவன் : சூரியன். அலரும் : மலரும்.

௭௯. வட்டு : காய். நெட்டு உடல : நீளமான உடம்பை உடைய.

௮௦. சக்கரவாகம் : ஒரு பறவை. அப்பறவையைக் கொங்கைக்கு உபமானமாகக் கூறுகிறார் இம்மடல் ஆசிரியர். அப்பறவையை நாம் அறியோம்.

௮௧. பாரம் : பெரிய. ஆரப் புளகம் : நிறைந்த மயிர்க்கூச்சு.

௮௨. தண் : குளிர்ச்சி. வெச்சு : வெப்பம். "வாவி உறை நீரும் வடநிழலும், பாவகமும், ஏ அனைய கண்ணார் இளமுலையும் — ஓவியமே! மென் சீதகாலத்து வெம்மை தரும் வெம்மைதனில், இன்பாரும் சீதளமாமே." என்ற வெண்பா இங்கு நினைக்கத் தக்கது.

Koviloor Digital Library

சித்ரமணிச் செப்பென்று செப்பலாம் அச்செப்புப்
புத்தமிர்த போகம் பொசியாதே - சுந்தரதிச் அங

சுந்தரம்சேர் புற்புதத்தைச் சொன்னால் பனிநீரும்
சந்தனமும் குங்குமமும் தாங்காதே - விந்தைசெறி

அந்தநறுங் கோங்கின் அரும்பெனலாம் அவ்அரும்புக்கு
இந்த முகக்கருமை எய்தாதே - சந்தமிகும் அரு

பூரணகும் பங்கள்எனப் போற்றலாம் அக்கும்பம்
தாரணியும் ஒண்சுணங்கும் தாராதே - சீரணியும்

மாகனக வெற்பெனலாம் மற்றுமந்த வெற்புஅரனார்
கோகனகக் கையால் குனிந்ததே - வாகுசெறி

பந்திணைகள் என்று பகரலாம் அப்பந்தும்
இந்துநுத லார்கைக்கு இடைந்தெழுமே - கந்தமிகும் அஅ

அங. செப்பு : கிண்ணம். புத்தமிர்த போகம் : புதிய அமிழ்த இன்பம். பொசியாது : கசியாது.

அச. புற்புதம் : நீர்க்குமிழி.

அரு. நறும் : நல்ல. கோங்கு : ஒரு பூச்செடி, அல்லது பூமரம். கோங்கரும்பு கொங்கைக்கு உபமான மாகப் பல இலக்கியங்களிலும் பயின்று வந்திருக்கிறது. அது யாதெனத் தெரியவில்லை.

அசு. தார் : மாலை. அணி : நகை. ஒண் சுணங்கு அழகுத் தேமல்.

அஎ. கனக வெற்பு : பொன் மலை. அரனார் : சிவ பெருமானார். கோகனகம் : தாமரை. குனிந்தது : வில் லாக வளைந்தது. வாகு : எழில்.

அஅ. பந்திணைகள் : இரண்டு பந்துகள். இந்து நுதலார் : சந்திரன் போன்ற நெற்றியை உடையார். இடைந்து எழும் : தளர்ந்து எழும்பும். கந்தம் : மணம்.

Koviloor Digital Library

பூங்கொத்து இலையாய்ப் புகலலாம் பூங்கொத்தும்
தேங்குதென்றல் வீசச் சிதறுமே - மாங்கனியின் அ௯

பக்குவமாம் என்று பகரலாம் அக்கனியும்
மிக்ககிளி கோதியிடில் மீருதே - தக்கபொரு ௯௦

வாகுமத யானை இருமத்தகம்என் றோதலாம்
பாகர்கொடுந் தார்க்குப் பயந்ததே - ஆகையினால்

மானே முதலிந்த மண்டலத்தில் நேரின்றித்
தானே தனக்குச் சரியாகி - ஞானமெலாம்

மொண்டெடுத்த மோன முனிக்குறும்பெ லாமடக்கத்
தண்டெடுத்து வந்த தநுமாரன் - கொண்டலெனும்

மட்டவிழும் பூங்கோதை மாதரிக் குந்தளக்கும்
இட்டவினைக் கூடாரம் என்னலாம் - வட்டத்து

இடங்கொண்டு பூரித்து இறுமாந்து முந்து
வடங்கொண்டு மேன்மேல் வளர்ந்து - தடங்கொண்ட ௯௫

அ௯. தேங்கு தென்றல் : நிறைந்த தென்றற் காற்று. சிதறும் : சின்னபின்னமாகும்.

௯௦. கோதியிடில் : கடித்து விட்டால். மீருது : வளராது. பொரு : போர் செய்கின்ற.

௯௧. பாகர் : செலுத்துவோர். கொடுந்தார் : பொல்லாத அங்குசம்.

௯௨. நேர் : சமம். ஞானம் எலாம் : அறிவு முழுமையும்.

௯௩. மொண்டெடுத்த : முகர்ந்து கொண்ட. தநுமாரன் : வில் வல்ல காமன் : கொண்டல் : மேகம்.

௯௪. மட்டு : தேன். கோதை : கூந்தல். வினைக் கூடாரம் : தொழிற்சாலைக் கூடம். வட்டத்து : வட்ட வடிவமாக.

௯௫. இடங் கொண்டு : பக்கத்து இடங்களை ஆக்ரமித்து. பூரித்து : பருத்து. தடம் : விசாலம்.

Koviloor Digital Library

வட்ட இரு மந்தரத்தை மார்பிற் பதிந்திறுகக்
கட்டுமணி ஆணிபோற் கண்கறுத்துக் - கிட்டிய ௩௯௬

பாளித லேப படாரம் உலாவிய
லாளித மோகன ராஜசம் - மேளம

னோகர காமவி னோதவி கார வ
சிகர கோமள சீதளம் - ஆகி

அரும்பி விரும்பி அசைந்து தலசைந்து
நிரம்பி நெருங்கி நெகிழ்ந்து - பரந்து

சுணங்கு நிறைந்து சுகந்த கதம்ப
மணங்குடி கொண்டு வயங்கி - இணங்கி ௪௦௦

அருந்தவர் சிந்தை அடங்கி மடங்கி
வருந்த நெருங்கி வளர்ந்து - திருந்திஒரு

தீதுங்கொள் ளாத செழுந்தா மரைமுகையின்
மோதும் சிறுதிவலை மொய்த்தனபோல் - ஓதமரர் ௪௦௨

---

௩௯௬. இரு மந்தரத்தை: இரண்டு மந்தர மலைகளை. இறுகக் கட்டும். இறுக்கிப் பூட்டுகின்ற.

௩௯௭. பாளிதம். பச்சைக் கற்பூரம். லேபம்: பூச்சு; லேபனத்தின் இடைக் குறை. படாரம். சந்தனம். லாளிதம்: அழகு. ராஜ சம்மேளம்: ராஜக் கூட்டம். கடைசி எழுத்தாகிய 'ம'வை அடுத்த கண்ணிக்குக் கொண்டு போக வேண்டும்.

௩௯௮. மனோகர காம விநோத விகார வசிகர என்று பிரித்துப் பொருள் கொள்ள வேண்டும்.

௩௯௯. அரும்பி: கூம்பி. தலசைந்து: தலைப் பொலிவு பெற்று. நெகிழ்ந்து: மிருதுத் தன்மையாகி. பரந்து: இடங் கொண்டு.

௪௦௦. சுணங்கு: தேமல். வயங்கி: விளங்கி.

௪௦௨. முகை: மொட்டு. சிறு திவலை: சிறிய நீர்த் துளி.

Koviloor Digital Library

வாழுங் கடல்கடைந்த மாயோன் மணிமகுடம்
சூழுந் தெறிந்த சுவைத்துளிபோல் - ஏழுலகும் ௧௦௩
மெச்சு கலைமதியின் வெண்ணிலா விசுமுத்தின்
கச்சுப் புனைந்த கலாதனத்தாள் - இச்சையினுல்

கை விரல்

ஏத்துகின்ற காமுகர்மேல் இன்பவேள் முத்திரையைச்
சாத்துகின்ற முத்திரைக்கோல் தானென்ன - சூத்திரங்
ஆயில் ஒருவர் அறியா அமிர்தநிலைக் [கண்டு
கோயில் திறக் குந்திறவு கோலென்னத் - தூயகலை
வாசிக்கும் பஞ்ச வளைக்கிள்ளை யின்சிவந்த
நாசிக்கு நேராய் நகந்துலங்கத் - தேசுற்ற
பத்ர கரவிர பத்திரமோ கோமளஞ்சேர்
சித்ரப் பருவச் சினைக்கெளிறோ - மெத்தென்று
தூய்ய பவளத் துகளறுகொம் போவென்ன
வெய்யமயல் பூட்டும் விரலினள் - செய்யசெழுந் ௧௦௯

---

௧௦௩. தெறித்த : சிதறிய. சுவைத் துளி : இனிக்கும் சொட்டு.

௧௦௪. நிலா விசு முத்தின் கச்சு : நிலவு கொழிக்கும் முத்துப் பதித்த ரவிக்கை.

௧௦௫. முத்திரை : அடையாளம்.

௧௦௬. ஆயில் : ஆராய்ந்தால். திறவுகோல் : சாவி. தூய கலை : பரிசுத்தமான நூல்.

௧௦௭. பஞ்சம் : ஐந்து. வளைக்கிள்ளை : சோலைக் கிளி. நாசி : மூக்கு. துலங்க : விளங்க. தேசு : ஒளி.

௧௦௮. கரவிர பத்திரம் : அலரிச்செடியின் இலை. சித்ரம் : ஓவியம். சினைக் கெளிறு : கருவுற்ற கெளிறு என்ற மீன் வகை.

௧௦௯. துகள் : குற்றம். வெய்ய மயல் : கொடும் மயக்கம். பூட்டுதல் : சேர்த்தல்.

Koviloor Digital Library

உள்ளங்கை

தாமரையின் போதைச் சலப்படுத்திக் காந்தளெனும்
மாமலரைத் தூர வனத்தகற்றிக் - காமுகர்மேல் கக0
வெங்கடுங்கோ பத்துடனே வீசிப் புடைத்தாலும்
செங்கழுநீர்ப் பங்கொந்துச் சீதளமாய் - இங்கிதத்து
மோகம்பூ ரிக்க முடிதுவக்கித் தாளவும்
ஆகம்பூ ரிக்கும் அகங்கையாள் - ஓகை இசை

முன்ளங்கை

விண்டிருக்கும் யாழ்களெல்லாம் வெட்கத் திருவுருவம்
கொண்டிருக்கும் யாழ்இனிய கோடொத்து -வண்டணிந்து
சுற்றுநவ ரத்னம் துலங்குகட கங்களினல்
மொய்த்தழகு மாருத முன்கையாள் - சித்ரமுலை

தோள்

பூரணகும் பங்களின்மேல் போட்டபெரு மாலைஎன்ன
ஆரணிவில் வேள்பஞ்சு அணைஎன்னச் - சீரணிந்து ககரு

கக0. சலப்படுத்தி : நீருக்குள் ஓட்டி. வனத்தகற்றி : காட்டுக்கு விரட்டி.

கக௧. புடைத்தல் : அடித்தல். செங்கழுநீர் : சேதாம்பல். சீதளம் : குளிர்ச்சி.

ககஉ. ஆகம் : உடம்பு. அகங்கை : உள்ளங்கை. ஓகை : மகிழ்ச்சி.

ககங. விண்டிருத்தல் : விரிந்திருத்தல். யாழ் : வீணை வகை. கோடு : வளைவு. வண்டு : வளையல்.

ககச. ரத்னம் துலங்கு கடகம் : வைரம் இழைத்த காப்பு.

ககரு. ககசு. பூரண கும்பம் : முழுக்குடம். ஆர் அணி வில் வேள் பஞ்சு அணை : நிறைந்த அழகுடைய வில் மாரனின் பஞ்சுபொதிந்த பக்க அணை. அங்குரித்து: முளைத்து. வேய் : மூங்கில். தளமாகிய குடத்தின் மீது

Koviloor Digital Library

கொங்கைமலை மேல்அங் குரித்தெழுந்து நேர்வளைந்த
துங்கமணி வேய்போலுந் தோளினாள் - திங்கள் ௧௧௬

கழுத்து

சுமுக மதராஜன் சுருதி இரு நாவாம்
குமுகுமெனும் புள்ளோசை கொஞ்சந் - தமரிக்கும்
வன்னிக்கும் பாளை மடலவிழு நாள்செல்லும்
கன்னிக் கமுகனைய கந்தரத்தாள் - துன்னிரவி

முகம்

வந்தாள் விகசிதமாய் வண்டின் பதந்துவையாச்
செந்தா மரைபோல் திருமுகத்தாள் - நந்தாத

உதடு

மாபவள மோவிலவமோ மாதளையோ வேல்விழியின்
கோபவள மோஇந்த்ர கோபமோ - சோபைதரும் ௧௨௦

சூட்டிய மாலையைப்போலவும் மன்மதன் அணையைப் போலவும் கொங்கை மலை மேல் முளைத்து எழுந்து நேரே வளைந்திருக்கின்ற மூங்கில் போலும் தோளை உடையாள்.

௧௧௭. சுமுகம் : நல்ல முகம். மதராஜன் சுருதி : காமக் கலை இசை. இரு : பெரிய. குமுகுமு : ஒலிக்குறிப்பு. புள் ஓசை : பறவைக் குரல். தமரித்தல் : ஒலி செய்தல்.

௧௧௮. வன்னித்தல் : வர்ணத்தை உண்டாக்கல். கன்னிக் கமுகு : இளம் பாக்கு மரம். கந்தரம் : கழுத்து. துன் இரவி : நெருங்கிய சூரியன்.

௧௧௯. வந்தாள் விகசிதமாய் : வந்து ஆள்வதால் மலர்கின்ற. விகசிதம் : மலர்தல். சூரியனால் மலர்த்தப்படும் வண்டின் கால்களால் உழப்பப்படும் தாமரை போலல்லாத செந்தாமரை மலர்த் திருமுகம் உடையாள்.

௧௨௦. வேல் விழியின் கோப வளமோ : வேலனைய கண்ணின் சினப்பெருக்கமோ. சின மிகுதி கண்ணைச் சிவப்பிக்கும்; அச்சிவப்பு உதட்டின் நிறத்துக்கு உபமானமாயிற்று. இந்திரகோபம் : பட்டுப் பூச்சி. இது மழைக் காலத்தில் தோன்றும்; நல்ல செந்நிறமாகவும் பட்டுப்போல் மிருதுவாகவும் இருக்கும்.

Koviloor Digital Library

தாதனையோ கிஞ்சுகமோ தொண்டையோ வண்டினங்கள்
தாதனையும் செங்குமுதத் தண்மலரோ - ஈதென்று கஉகூ

எவரும் உபமானம் எடுத்துரைக்க நல்மா
தவரும் மயங்கித் தயங்கக் - குவிபொன்

பொழிந்தருளும் தென்நாகைப் பூபதியைப் போற்றும்
செழுந்தமிழே போற்செம்மை சேர்ந்து - தொழுந்திருமால்

இன்னம் ஒருகால் இருகை வருந்தாமல்
வன்னமதியம் மழுங்காமல் - இன்அமிழ்தம்

ஆன உததி அலையாமல் வானவரும்
தானவரும் வெம்போர் சருவாமல் - நானிலமேல் கஉரு

வாசுகியும் மந்தரமும் மாயாமல் மாறுமல்
ஆசைஅமுது ஊறும் அதரத்தாள் - விசுகதிர். கஉசு

கஉக. தாதனை : தாதுளங் கனி. கிஞ்சுகம் : முள் முருக்கம்பூ. இது சிவப்பு நிறமுடையது. "கிஞ்சுகவாய் அஞ்சுகமே" என்பது திருவாசகம். தொண்டை : கொவ்வைப் பழம். இனம் : கூட்டம். தாது : மகரந்தத் தூள். கஉஉ. குவிபொன் : பொற்குவியல்.

கஉங. பூபதி : வருணகுலாதித்தன். செழுந் தமிழ் போன்ற செம்மை நிறம் படைத்திருக்கின்றது இதழ்.

கஉங, கஉச, கஉரு, கஉசு. பாற்கடல் கடையத் திருமால் இன்னும் ஒருமுறை கைகள் வருந்தாமல், கடல் கடைந்தபோது தூணைகப் பொருத்தப்பட்ட சந்திரன் மழுங்காமல், அமுதம் தந்த கடல் திரும்பவும் கலங்காமல், அமரர்க்கும் அசுரர்க்கும் மற்றுமொரு போர் நேராமல், கடல் கடையக் கயிருகப் பொருத்தப்பட்ட வாசுகி என்னும் பாம்பு மாண்டு மறியாமல், மத்தாகப் போட்ட மந்தரமலை நிலை குலையாமல், இயல்பாகவே ஆசைதரும் அமிழ்தம் ஊறுகின்ற இதழ்களை உடையாள் என்பது கருத்து. வன்னம் : அழகு. உததி : கடல். அதரம் : உதடு. விசு கதிர் : ஒளிவிடுகின்ற.

நகை

முருந்தாமித் தோகை முருந்தாமி முல்லைமுகைக்
கொந்தாமித் தந்தக் குருத்தரும்பி - விந்தாரம் ௧௨௭

வாய்த்தபத்மராக மணியைத் தாம்பிரித்துத்
தேய்த்தொப்பம் இட்டுவைத்த சேர்வைஎனக் - கோத்துப்

பொருநிருப வேள்சிலையில் பூங்காவி என்ன
இருநிரையும் பூங்காவி ஏறி - உருகிமவம்

பூணை நகைக்கும் புகழ்க்கொல்லி யம்பாவை
நாணை நகைக்கும் நகையினாள் - காணஎதிர் ௧௩௦

சொல்

தீட்டிவைத்த சித்திரத்தைச் சிங்கார மோகனக்கூத்து
ஆட்டுவிற்கும் செஞ்சொல் அமிர்தத்தாள் - தோட்டிலயன்

---

௧௨௭. தோகை முருந்து : மயில் இறகின் அடிப் பக்கம். இது தூய்ய வெண்மை நிறமாக இருக்கும். இது பல்லுக்கு ஒப்பு. “முருந்து உரழ் முரலார்” என்பது நைடதம்.

௧௨௮. பத்மராக மணி : சிவப்பு ரத்னம். சிகப்பை வரிசையாகக் கோத்த மாதிரி இருந்தது பல்வரிசை. வெற்றிலையை நன்றாகப் போட்டிருத்தல்கூடும்போலும்!

௧௨௯. பொருநிருபவேள் : மன்மதன். சிலை : வில். பூங்காவி : காவி மலராகிய பாணம். இருநிரை : இரண்டு வரிசை. பூங்காவி : அழகிய செந்நிறம்.

௧௩௦. புகழ்க் கொல்லி அம்பாவை : கண்டவர் புகழைக்கொல்லும் அழகிய பதுமை. நாண : வெட்க. நகை : சிரிப்பு. நகை : பல்.

௧௩௧. எழுதி வைத்த சித்திரத்தைக் கூடக் கிடுகிடு வென்று மோகனக் கூத்தாடச் செய்யும் அமிழ்தம் போன்ற சொற் பயிற்சி யுடையாள். தோட்டில் அயன் : மலரின்மேல் இருந்த பிரமன்.

Koviloor Digital Library

கபோலம்

மன்றுடையர் விண்ணுடையர் வந்தழகு பார்க்கவைத்த
கண்ணாடி போலுங் கபோலத்தாள் - வண்ணஎழில் கரு௨

மூக்கு

கொள்ளும் குமிழும் குமிழ்போல் நிறம்படைத்தால்
எள்ளும் சரியாம் இதற்கென்னத் - தள்ளிச்
சுரமஞ் சரிவிடுத்த சுண்ணம் பழித்த
அருமந்த சிவகனும் அஞ்சப் - பெருமணத்தின்
காமோது வண்டின் கணத்துக் களந்தறியா
ஆமோத வல்லபமுண் டாக்கிவைத்துப் - பூமேவு கருரு
விற்காமன் தேரோடும் வீதிஎனச் சந்ததமும்
நற்கால் வழங்குகின்ற நாசியாள் - பொற்கோதை கருசு

கரு௨. கன்னம், வான நாடரும் இம்மாநிலத்தாரும் அழகு பார்ப்பதற்குரிய கண்ணாடி போல அமைந்திருக்கிறது. கபோலம் : அலகு.

கருரு. குமிழ் : மூக்குக்கு இணையான ஒரு பூ. அது நல்ல நிறம் உடையது என்று தெரிகிறது. குமிழ் போல் நிறம் படைத்தால் என்பது அதனைக் காட்டுகிறது. " குரு வளர் பூங் குமிழ்" என்றார் திருக்கோவையார் ஆசிரியர். எள் : எட் பூ. எட்பூ ஏசிய நாசியாய்" என்பது மணிமேகலை.

கருச. சுரமஞ்சரி என்பவள் சிவகன் மணந்த பல பெண்களுள் ஒருத்தி. சுண்ணம் : வாசனைப் பொடி. அருமந்த : அரும் - மருந்து - அன்ன. பெருமணம் : சிறந்த நாற்றம்.

கருரு. கா : சோலை. கணம் ; கூட்டம். அளந்தறியா : அளவிடமுடியாத. ஓத : சொல்ல. வல்லபம் : வலிமை;

கருசு. விற்காமன் தேர் : தென்றல். நற்கால் : நல்ல காற்று. நாசி : மூக்கு.

Koviloor Digital Library

செவி

தேன்போது அணியும் செழுங்காவிக் கண்களெனும்
மான்போய் வரவிட்ட வாயில்போல் - தாம்போதக் கஙஎ

காவப்பொன் ஓலை தரித்தால் விழிக்கூற்றம்
வாவப் பிடிக்கும் வலையம்போல் - பூவுலகெண்

சுந்தமுழு மாணிக்கத் தோடணிந்தால் நிலவிழி
அத்தி இரு பாலுதிக்கும் ஆதவன்போல் - பத்திதரும்

பைந்தாளத் தோடணிந்தால் பார்வைச் சகோரங்கள்
வந்தமுதம் உண்ணும் மதியம்போல் - முந்தவே கசഠ

சால அழகு ததும்பி வழிந்தொழுகும்
கோல மகரக் குழைச்செவியாள் - ஆலவடி. கசக

கஙஎ. தேன் போது: தேன் சொட்டும் பூ. காவி: நீலோற்பலம். வாயில்: வழி. போத: நன்முக.

கஙஅ. பொன் ஓலை: தங்கத் தோடு. விழிக்கூற்றம்: கண்ணாகிய எமன். வாவ: தாண்ட. வலையம்: வளையம். பூஉலகுளன்: பூமி மதிக்கின்ற.

கஙகூ. மாணிக்கத் தோடு: சிகப்புக் கல் இழைத்த தோடு. அத்தி: கடல். நில விழியாகிய கடலுக்கு இரு புறமும் புறப்படும் சூரியன்போல இருக்கும் சிவப்புத் தோடு அணிந்தால். பத்தி: வரிசை.

கசഠ. பைந் தாளத் தோடு: பசுமையான முத்துப் பதித்த காதணி. சகோரங்கள்: நிலவு உண்ணும் ஒரு வகைப் பறவை.

கசக. மகரக் குழைச் செவி: மீன் வடிவமாகச் செய்யப்பட்ட காதணியைத் தாங்கிய காது. ஆலம்: நஞ்சு. வடி: கூர்மை.

Koviloor Digital Library

கண்

வேல்போல் நிறம்படைத்து விரவாள் போல்இரண்டு
சேல்போல் கயல்போல் திரைபரந்து - மால்போலச் கசஉ

சஞ்சரிகம் போலத் தயங்கிக் கடல்போல
நஞ்சும் அமுதும்நயந் தருளிக் - கஞ்சர்எனச்

செங்குவளை என்னச் சிறந்த கருவிளையின்
பொங்கு மலரெனவே பொற்பெய்திக் - கங்குல்இபக்

கோலா கலவேள் கொலைப்பஞ்ச பாணம்என
ஏலா விரகாக் கினிஎழுப்பி - மேலான கசரு

தேமா வடுவகிர்போல் செவ்விக் குறிபொங்கி
மாமாரன் என்ன மதத்தோடி - பூமாதின்

ஆதி அரிபோல் அயன்போல் அரன்போலச்
சோதி கறுத்துவெளுத் துச்சிவந்து - பாதகமும்

மாயமும் பொய்ம்மையும் வஞ்சகமும் தஞ்சமிகு
நேயமும் சூதும் நினைவுருக்கு - பாயமும்

அத்திரமும் வீறும் அதிக்கிரம முங்கனவும்
குத்திரமும் போதக் குடிகொண்டு - நித்தம்இகல் கசசு

கசஉ. சேல், கயல் : மீன் வகைகள். மால், கரு விழிக்கு உவமை.

கசங. சஞ்சரிகம் : வண்டு. கஞ்சம் : தாமரை.

கசச. குவளை : நீலோற்பலம். கருவிளை மலர் : காக்கணம் பூ என்ற ஒருவகைப் பூ. கங்குல் இபம் : இரவாகிய யானை.

கசரு. கொலைப் பஞ்ச பாணம் : கொலை வல்ல ஐந்து அம்பு.

கசசு. மா வடு வகிர், கண்ணுக்கு உபமானம். "மா வடு வகிரன்ன கண்ணி பங்கா" என்றார் மணிவாசகனார். மாரனைப் போன்ற மதமதப்பு. பூமாது : இலக்குமி.

கசஎ. திருமால், பிரமன், சிவனைப் போலக் கருமையும் வெண்மையும் செம்மையும் பெற்று.

கசஅ. இகல் : பகை.

Koviloor Digital Library

வாரைத அடர்ந்து வரிபரந்து மைஎழுதிக்
காதை அடைந்து கடைசிவந்தே - ஒருகலை கடுo

கற்றவரை எல்லாம் கருத்துருக்கிக் காமரசம்
உற்ற அலங்காரம் உட்கொண்டு - சுற்றும்

புவிக்குள்நிகர் அற்ற புலவோர்தம் செஞ்சொல்
கவிக்குநிகர் ஆகும்இரு கண்ணாள் - குவித்தமலர்

புருவம்

நற்அளகக் கொண்டலுக்கும் ஜோதி நுதற்பிறைக்கும்
தாழ ஒளிரும்இந்த்ர சாபமோ - ஆழிவரு

காளம் பொதிந்தகன்ற கண்ணென் றுரைக்கும்வடி
வாளின் உறைகழற்றி வைத்ததோ - வாளை

நெருங்குகட லும்புலம்ப நிலநிறப் பார்வைக்
கருங்கடலுக் கிட்ட கரையோ - பெருங்கபடக் கடுரு

காமன் அயிலும் கயலும் பொருநயனத்
தாமரையின் பக்கத் தரங்கமோ - மாமதனைச் கடுசு

கடுo. வரி: ரேகை. காதை அடைந்து: காது வரைச் சென்று.

கடுஉ. புலவோர் கவியைப் போல விரிந்த பொருள் கொண்ட இரு கண் உடையாள்.

கடுங. அளகக் கொண்டல்: கூந்தலாகிய மேகம். நுதற் பிறை: நெற்றியாகிய சந்திரன். இந்திர சாபம்: வானவில். ஆழி வரு: சமுத்திரத்தில் தோன்றிய.

கடுச. காளம்: நஞ்சு. பொதிந்து: பெய்து. அகன்ற: விசாலமான. வடிவாள்: கூரிய கத்தி. உறை: கூடு. வாளை: மீன் வகை.

கடுசு. அயில்: அம்பு. பொரு: ஒத்த. நயனம்: கண். தரங்கம்: அலை.

Koviloor Digital Library

சித்திரமோ காதிசயம் செய்விக்கும் மாறன்நிம்ப
பத்திரமோ என்னும் படிவிளங்கிப் - புத்திதனை கருஎ
வாட்டுசிலை வீர மதவேள் மலரம்பு
பூட்டுசிலை போலும் புருவத்தாள் - தோட்டிதழிக்

நெற்றி

கொந்தார் சடையோன் குலவுநுதற் கண்போலச்
சிந்தூரம் இட்டும் திருநுதலாள் - அந்தரத்தில்

கூந்தல்

ஓட்டமிடும் இன்தேர் உதயமார்த் தாண்டன்மேல்
கூட்டமிடும் கங்குற் குழாங்கொலோ - நாட்டமுறத் கசூ௦
தேசுபுனை பங்கயமேல் சேர்மதுக ரத்திரளோ
வீசும் முகமதிதோய் மேகமோ - ஆசைமதன்
காவணமோ கொன்றைக் கருங்கனியோ காயாவின்
பூவணமோ மஞ்ஞைபயில் பூங்காவோ - தாவுதமிழ்

கருஎ. காதி : போர் செய்து. மாறன் : பாண்டியன். நிம்ப பத்திரம் : வேப்பிலை. புருவம் வடிவத்தில் வேம்பின் இலைக்கு ஒப்பிடப்படுகிறது.

கருஅ. தோடு இதழி : இதழ்களையுடைய கொன்றைப் பூ.

கருகூ. கொந்து : பூங்கொத்து. சடையோன் : சிவபெருமான். நுதற்கண் : நெற்றிக் கண். சிந்தூரம் : குங்குமம். அந்தரம் : வானம்.

கசூ௦. உதய மார்த்தாண்டன் : காலை ஆதவன். கங்குற் குழாம் : இருட் கூட்டம். நாட்டம் : கண்.

கசூக. தேசு: ஒளி. பங்கயம் : தாமரை. மதுகரத் திரள் : வண்டுக் கூட்டம்.

கசூஉ. காவணம் : கொட்டகை. மஞ்ஞை : மயில். பூங்கா : மலர்ச் சோலை. தாவு தமிழ் : பிற மொழிகளையெல்லாம் கலந்து மேலோங்கிய தமிழ்.

Koviloor Digital Library

கல்லார் மனமோ கலவி விலைவாங்க
வல்லார் பொதுமகளிர் வன்னெஞ்சோ - எல்லாரும் ௧௬௩
மருண்டு அதிசயிக்க இந்திரநீ லத்தில்நறும்
தாதொன்றி வாசச் சவாதணிந்து - போதொன்றி
நெய்த்துக் கடைகுழன்று நீண்டு சுருண்டடர்ந்து
மைத்துத் தகர மணம்பொதிந்து - மொய்த்துமணம் ௧௬௫
போதிக்கும் வண்டும் சுரும்பும் ஆடிப்பாடிச்
சாதிக்கும் நாடக சாலையோ - ஓதத்
துவனிநீர் அலைபோல் துறவோர் அலையப்
பனிநீரால் வாசம் பரவித் - தனியே
வெறும்புகையும் நெட்டுயிர்ப்பு மேவினோர் கொள்ள
நறும்புகையும் சாந்தும் நயந்து - நிறம்புதிய
பைந்தளவும் மல்லிகையும் பன்னீரும் பாரித்தால்
கந்தரத்தில் தாரா கணம்போன்றும் - சந்தமடல் ௧௬௯

---

௧௬௩. கல்லார் மனம், நல்ல இருட்காடாக இருக்கும்; கூந்தல் அப்படி இருக்கின்றது. வன் நெஞ்சு : வன் கண்மை வாய்ந்த உள்ளம்.

௧௬௪. இந்திர நீலம் : நல்ல நீல நிறம். "இந்திர நீலம் ஒத்து இருண்ட குஞ்சியும்" என்கின்றார் கம்பர். நறுந்தாது : நல்ல மணத்தூள்.

௧௬௫. தகரம் : மயிர்ச்சாந்து.

௧௬௬. வண்டினங்கள் முழுதும் நடனமாடுகின்ற அரங்கோ கூந்தல்.

௧௬௭. த்துவனி : ஒலி

௧௬௮. நெட்டுயிர்ப்பு : பெரு மூச்சு.

௧௬௯. பைந் தளவு : பசிய முல்லை. பாரித்தல் : பெய்தல். கந்தரம் : கழுத்து. தாரா கணம் : நட்சத்திரக் கூட்டம்.

Koviloor Digital Library

தண்காலும் செங்கமலஞ் சாத்தினால் மாயவனார்
கண்கால் முகங்கனிவாய் கைபோன்றும்-திண்காதல் கஎ௦
கைவண் குருவேர் கலந்தால் வரிஅறல்சூழ்
சைவலத்தின் கொத்துத் தலைப்போன்றும்-இவ்வகையே
வேரிச் செழுமலரும் வில்வேள் கணைமலரும்
வாரிச் சொருகும் மலர்க்குழலாள் - தாரணியில்

வடிவு

சாதுரிய வேதாவும் தார்குழலா ரைப்படைக்க
மாதுரியம் பார்க்கும் வடிவினுள் - ஆதரிக்கும் கஎ௩

கஎ௦. தண் காலும் : குளிர்ச்சியைக் கக்குகின்ற. செங்கமலம் : செந்தாமரை. கூந்தலிலே செந்தாமரைப் பூக்களைச் சூட்டினால் கருநிறமான மாயவனார் நிறம் போன்ற குழலிலே சூட்டிய அப்பூக்கள், அத்திருமாலின் கண், கால், முகம், வாய், கை போலச் சிவப்பாகக் காணப் படும். "கண்ணும் திருவடியும் கையும் திருவாயும் செய்ய கரியவனை" என்பது சிலப்பதிகாரம். "கை வண்ணம் தாமரை வாய் கமலம் போலும் கண்ணிணைகள் அரவிந்தம் அடியும் அஃதே" என்பது திருமங்கை மன்னர் திருமொழி.

கஎக. குருவேர் : சிறு வியர்வை. வரி அறல் : கோடுபோல் அமைந்த நீர். சைவலத்தின் கொத்து : பாசிக் கொத்து.

கஎ௨. வேரி : தேன். மலர்களையும் மன்மதன் அம்புப் பூக்களையும் அள்ளிச் செருகும் கூந்தலுடையாள். "முருகிற் சிவந்த கழுநீரும் முதிரா இளைஞர் ஆருயிரும். திருகிச் செருகும் குழல் மடவீர் செம்பொற் கபாடந் திறமினோ?" என்ற கலிங்கத்துப் பரணிச் செய்யுள் இங்கு ஒப்பு நோக்கத் தக்கது.

கஎ௩. வேதா : பிரமா. மாதுரியம் : மிக உயரிய நிலை,

Koviloor Digital Library

தன்மை

மையல் மதவேள் வளநகரி சோதனைக்கோர்
வடிவுரு வாகிவந்த தன்மையாள் - தூய்ய க௱௪

மலை

தொடரு மழைமேகம் தோய்தலால் ஆழப்
புடவிதனைச் சுற்றும் பொருளால் - படரும் க௱௫

தளவநகைப் பாவை தரலால் மதிக்க
அளவு படாத அதனால் - கிளரும்பொழில் க௱௬

க௱௪. மையல் மத வேள் : மயக்கத்தையும் மதத்தை யும் கொடுக்கும் மன்மதன். வள நகரி : வளமான நகரம். காமன் நகர் சோதனை நடாத்துதற்கு என்றே ஒப்பற்ற நங்கையாக வடிவு பெற்று வந்த தகுதியுடையாள் இவள்.

இதுவரை, காதல் கொண்ட தலைவன் காதலிக்கப் பெற்ற தலைவியைக் கால் முதல் தலை வரை விரிவாக அலங்கரித்தான். இனிப் பாட்டுடைத் தலைவனாகிய வருணாகுலாதித்தனை வர்ணிக்கின்றான். மலை தொட்டு ஆணை ஈறாக அவனுடைய தசாங்கச் சிறப்பு மேலே வருகின்றது.

க௱௫. முதல் க௱௬ முடிய உள்ள கண்ணிகள் மலைக்கும் கடலுக்கும் சிலேடை.

க௱௫. மழை பொழியும் மேகம் கடலிலும் தோய்கின்றது; மலையினும் படிகின்றது. புடவி : உலகம். அது கடலைத் தனக்கு ஆடைபோல் சுற்றியிருக்கிறது; மலையைச் சுற்றிப் பூமி யிருக்கின்றது.

க௱௬. தளவம் : முல்லை. முல்லை போன்ற பல்லைப் பெற்ற பாவையைக் கடலும் தந்தது; மலையும் ஈன்றது. கடல் தந்த காரிகை இலக்குமி; மலை தர வந்த மங்கை பார்வதி. மதிக்கும் அளவுக்குள் கடலும் அடங்காது; மலையும் அப்படியே.

Koviloor Digital Library

அம்புலிதோற் றத்தால் அமைதருநி லப்பரப்பால்
விம்பமணிக் குன்றுபல மேவலால் - உம்பரின்மேல் கஎஎ
தேங்குவ சிகரத்தால் திண்கோட்டு நாகமே
தாங்குதலால் மாலைத் தரிக்கையால் - ஓங்கி
வளங்குலவு நேமி மகரா லயம்போல்
விளங்கு முனிவன் விதித்த - வளங்கொள்
தமிழின் சுவைஎனவே தண்குறிஞ்சிச் செந்தேன்
உமிழும் பவளமலை உள்ளோன் - கமழும் கஅ௦

நதி

செழுங்கடுக்கைத் தாராளன் செஞ்சடைபோல் மின்னி
முழங்கித் திசையனைத்தும் மூடி - ஒழுங்கிக்
கடல்நீர் பருகிக் ககனமுகடு ஏறித்
திடல்நீடு குன்றச் சிகரத்து - அடல்நீடு கஅஉ

கஎஎ. சந்திரன் கடலிற் பிறக்கின்றான்; மலையிலும் தோன்றுகின்றான். நிலப் பரப்பு கடலுக்கும் உண்டு; மலைக்கும் மேகம் படிதலால் உளது. விம்பம்: ஒளி: கடலுக்குள் ஒளிக் கற் குன்றுகள் இருக்கின்றன; மலையிலும் அப்பொருள்கள் உள.

கஎஅ. வசிகரிக்கும் தன்மை கடல், மலை இரண்டுக்கும் உள. திண் கோட்டு நாகம்: வலிய தந்தத்தை யுடைய யானை. யானை கடல் மலை இரண்டிடங்களிலும் உளது. கடலில் உள்ளது நீர் யானை. கடல் திருமாலைத் தன்னுள் படுக்க வைத்திருக்கிறது; மலை மாலைக்கால ஆதவனை வாங்கிக் கொள்கின்றது.

கஎகூ. நேமி: சக்கரம். மகராலயம்: கடல். முனிவன்: அகத்தியன்.

கஅ௦. குறிஞ்சி: மலை நிலம். பவளமலை: வருண குலாதித்தன் மலை. உள்ளோன்: உடையோன்.

கஅக. கடுக்கை: கொன்றை. தார்: மாலை. அந் தாராளன்: சிவன்.

கஅஉ. பருகி: குடித்து. ககனமுகடு: வான உச்சி. குன்றச் சிகரம்: மலைக் குடுமி.

Koviloor Digital Library

மேகத் திரள்கால் விழுந்து பொழியமண்ணும்
மாகமுந்தன் னுக்க வளர்வெள்ளம் - மோகமலர் ௧௮௩

மாலைப் புணரும் வருணாகுலா தித்தன்மகிழ்
சோலைப் பெருக்கம் எனத்திகழ்ந்து - கானில்

விசைகொண்டு கால்எடுத்து விரிநெடுந் தோடித்
திசைகொண்டு காம்பீரம் செய்து - மிசைஉந்தித் ௧௮௫

தண்குறிஞ்சி வந்தடைந்து சம்பகம்பி டுங்கிவண்டு
பண்குறிஞ்சி நந்துகொந்து பந்தணைந்து - தண்குறிஞ்சி

சந்தனங்க ளைந்துமுந்தி தந்திசிங்கம் எண்கினங்கள்
உந்திமுன்பெரு டொன்றெதிர்ந்து டைந்தழிந்த -
வந்திரைந்து

விண்டுமண்டு விண்டடர்ந்து விண்தொடர்ந்து
குன்றடைந்து
கொண்டுநின்ற குங்குமங்கொணர்ந்தெழுந்து-மிண்டுகின்ற

தந்ததொந்த மென்றுசந்த தங்கமுங்கு கொண்டமைந்த
அந்தவண்டல் எங்குமொண்ட டர்ந்துசென்று - முந்தி

---

௧௮௩. திரள் கால் : திரண்ட காற்று. மாகம் : விண்ணுலகம்.

௧௮௪. மலர்மான் : திருமகள். கலைமகளையும் கொள்ளலாம். கான் : காடு.

௧௮௫. திசைகொண்டு : திக்கெலாம்பரந்து.

௧௮௬. தண் குறிஞ்சி : குளிர் வரைநிலம். பண் குறிஞ்சி : குறிஞ்சி ராகம்.

௧௮௭. சந்தனங் களைந்து : சந்தன மரங்களைப் பிடுங்கி. முந்தி : விரைந்து. தந்தி : யானை. சிங்கம் : சிம்மம். எண்கு : கரடி. உந்தி : செலுத்தி.

௧௮௮. விண்டு : மலை. விண்டு : பிளந்து. மிண்டுதல் : நெருங்குதல்.

௧௮௯. தந்த தொந்தம் : ஒலிக்குறிப்பு.

Koviloor Digital Library

விளைந்த கருந்தினை செந்தினை விஞ்சி
வளைந்த புனங்களை மன்றி - அளைந்து கக0
வருந்த மனங்குற மங்கையர் ஒன்றி
இருந்தப ரண்கள் எறிந்து - நிரம்பிய
குங்கிலிய மும்திமிசும் கொண்டோங்கிக் கேகயமும்
பைங்கிளியும் ஓடப் பறந்தோடித் - துங்கமுறத்
தாங்கும் மயில்படைத்த தாடாளனைக்கரத்தில்
ஓங்கும் அயில்படைத்த உத்தமனைப் - பூங்கடப்ப
மாலையனை வண்டா மரைமாட பீடத்தின்
மேலயனைக் காவல் விளைத்தானைக் - கோலமதி
ஆறுமுகத் தானை அசுரர் குலம்அழியத்
தூறுமுகத் தானை தொலைத்தானை - விறுமலர் கக௫
வேரிப்ப தாம்புயனை மென்குறத்தி கொங்கைபடப்
பூரிப்ப தாம்புயனைப் புண்ணியனைச் - சிருற்ற
கந்தனைச் சேயைக் கடவுளைச்செவ் வேளைஅரன்
மைந்தனைக் கண்டு மனமகிழ்ந்து - முந்தினதிர் கக௭

கக௨. குங்கிலியம் : குங்கிலிய மரம். திமிசு : வேங்கை மரம். கேகயம் : மயில்.

கக௩. தாடாளன் : பெருமையிற் சிறந்தோன். கரம் : கை. அயில் : வேல். கடப்பம் : கடம்பு.

கக௪. காவல் விளைத்தான் : சிறை வைத்த முருகன்.

கக௫. தூறு : கூட்டம். தானை : படை. விறு : சிறப்பு.

கக௬. வேரி : தேன். பதாம்புயம் : பாத தாமரை. மென் குறத்தி : வள்ளி. பூரிப்பதாம்புயனை : பூரிக்கின்ற தோளை உடையவனை.

கக௭. சேய் : முருகன் பெயர்களுள் ஒன்று; கடவுளின் சேய் ஆதலினல்.

கக௩ முதல் இதுவரை குறிஞ்சி நிலக் கடவுளாகிய வேலனைப் பற்றி.

Koviloor Digital Library

பாலைவனம் மேவியது பாதகவில் வேடர்அணி
வேலைவடி வாளை அலை மேலுதறி - ஓலமிடு ௧௯௮

கூபம்உறை நீரினொடு கூடிவிளை யாடிஅதி
தாபவனம் மேவி அழல் சாடிநிறை - மாபுறவின்

கூடுகளைக் காரகிலைக் கோலமுரு டானகள்ளிக்
காடுகளைச் சாய்த்திருப்பைக் கான்நறுகி-நீடுவிறல் ௨௦௦

பாராள ரைப்போல் பகற்சூரை ஆடுவார்
போராடல் எல்லாம் புறங்கண்டு - பிராமி

அந்தரி பிங்கலை அம்பிகை சங்கரி
சுந்தரி விந்தை சுமங்கலை - மந்தர

பார படீர பயோதரி பூதரி
காரணி வாமினி காமினி - திரி

அமலை நிமலை அரிவை தெரிவை
கமல சரணி கவுரி - குமரி

வராகி கபாலி மனோன்மணி சூலி
புராணி சடாதரி பூவை - தராதலந்தோர் ௨௦௫

---

௧௯௮. ஓலம் : சத்தம்.

௧௯௯. கூபம் : கிணறு. அழல் சாடி : பாலை நில நெருப்பொடு போர் செய்து. புறவு : புறா.

௨௦௦. முருடு : மரக்கணு. இருப்பைக்கான் : இருப்பைமரக் காடு.

௨௦௧. பாராளரைப்போல் பகற்சூரை ஆடுவார்: பாரை ஆளுகின்றவர்களைப் போலப் பகல் கொள்ளை இடுவார். பாரை ஆளும் வேந்தர் வலி கொண்டு குடிகளிடம் கவர்வது பகற் கொள்ளை என்பது கருத்து. பகற் சூரையாடுவார் பாலை வனத்திலே திரியும் திருடர்கள்.

௨௦௨ முதல் ௨௦௫ வரை அம்பிகையின் பெயர்கள். அவைகள் பாலை நிலப் பாவைக்குக் கூறப் படுகின்றன.

Koviloor Digital Library

பன்னி அடிவணங்கும் பாலைக் கிழத்திஎனும்
கன்னி தழுவக் களிகூர்ந்து - நன்னிலமென் ௨௦௬

முல்லை புகுந்து முருகு பெருகுநெடுங்
குல்லை அணிந்து குழல்ஏந்தி - எல்லையில்தன்

மன்றல்அள கத்துக்கும் வாள்நகைக்கும் ஒப்பென்று
கொன்றையும் முல்லையும் கோத்தெறிந்து - வென்றி

திரள்புருஷன் நாகையர்கோன் செங்கைக் கொடைபோல்
சுரபிதனை அஞ்சத் துறந்து - குரவையிலே

மண்டு பொதுவியர்தம் மாமே கலைவாரிக்
கொண்டுநெடு மால்போல் குருந்தேறித்-
தண்டலையில் ௨௧௦

காயா மலர்நிறக் காரணமென் என்றுவிழச்
சாயா முறியாத் தமரித்துத் - தூயமலர்

வெண்படாத் தைக்களைந்து வேறுபடாம் சாத்துவர்போல்
தண்படா வெண்படாம் சாத்திப்போய்-வண்பரணார் ௨௧௨

---

௨௦௬. பாலைக் கிழத்தி : பாலைக்கு உரியவள்.

௨௦௭. முல்லை : காடு சூழ்ந்த நிலம். முல்லை : துளசி. குழல் : மூங்கில் குழாய்.

௨௦௮. மன்றல் : மணம். அளகம் - கூந்தல். நகை : பல்.

௨௦௯. சுரபி : காமதேனு. குரவை : இடைப் பெண்கள் ஆடும் கூத்து.

௨௧௦. பொதுவியர் : ஆயர்குலப் பெண்கள். மேகலை : ஆடை. குருந்து : குருந்தமரம். தண்டலை : சோலை.

௨௧௧. சாயா : சாய்த்து. முறியா : முறித்து. தமரித்து : சத்தம் போட்டு.

௨௧௨. படாம் : ஆடை.

Koviloor Digital Library

நேரிழைவந் தாளென்று நெய்பால் தயிரான
வாரினதி கொள்ள வந்தவனைப் - பாரினரும் உகங.

தேரான் வருணகுலா தித்தன்பால் நாகையிலே
பாரோர் விருந்தருந்தும் பந்தியினைப் - பேராயர்

பாடிதனில் நெய்ச்சாடி பாற்சாடி மிக்கதயிர்ச்
சாடி நிமிடந் தனிற்சாடி - ஓடிக் உகரு

கடுங்கான் இடைநடந்து கல்லைப்பெண் ஆக்கி
அடுங்கான வெம்பணியில் ஆடி - நெடுங்கோட்டு

மாமருதம் சாய்ந்து வணங்குவார் நெஞ்சுறைந்து
தாம மணியும் சகடுதைந்து - பூமினனும்

மின்னை அளந்து விளங்கித் தலைநாளில்
தன்னையும் பெற்றஇரு தாள்வணங்கி - முன்னி

மருதம் புகுந்து வனசம் புனைந்து
மருதம் களைந்து வளைந்து - கருதரிய உககூ

உகரு. சாடி : பாத்திரம். நிமிடம் தனிற் சாடி : நிமிஷத்தில் அடித்துக்கொண்டு.

உகசா. கடுங்கான் : கடுமையான கானகம். கல்லைப் பெண்ணாக்கியது அகலிகை கதை. பணி : பாம்பு. பணியில் ஆடியது : காளிங்கன் என்னும் பாம்பின் மேல் ஆடியது. நெடுங்கோடு : நீண்ட கிளை.

உகஎ. மாமருதம் : பெரிய மருதமரம், தாமம் : மாலை. சகடு : வண்டி வடிவமாக வந்த அசுரன்.

உகஅ. மின்னை அளந்து: மாவலிபால் உலகு அளந்த வரலாறு. உ௱எ. முதல் இதுவரை திருமாலுக்கும் நடிக்கும் சிலேடை.

உககூ. மருதம் : நெல் முதலிய உயர் பொருள் விளையும் நன்செய் நிலம். வனசம் : தாமரை. மருதம் களைந்து : மருத நிலப் பொருள்களை வாரி.

Koviloor Digital Library

எம்பிரான் தேவி எழுந்தருளி னாளென்றே
உம்பர்கோன் வைத்த உழுப்பையெனப் - பைம்பூகத் ௨௨०
தாறும் இளநீரும் தண்கரும்பும் மஞ்சளிஞ்சி
தேறும் கருணைச் செழுங்கிழங்கும் - ஊறிரதத்
தேமா நறுங்கனியும் தின்பலா வின்கனியும்
மாமா தளையின் வளர்கனியும் - ஆமலகப்
பைங்கனியும் வாழைப் பசுங்கனியும் பேரெலுமிச்
சங்கனியும் பொற்றமரத் தங்கனியும் - துங்கமலர்ச்
சோலைவாய் வண்டுவைத்த சுத்தப் பசுந்தேனும்
ஆலைவாய்க் கன்னல் அடுபாகும் - மாலதியும்
பன்னீரும் மல்லிகையும் பாளையும் பாதிரியும்
மன்னும் குவளை மதுமலரும் - இன்னவகை ௨௨௫
எல்லாம் பரவி இருந்த இடந்தோறும்
உல்லாச மாக உலாவிவந்து - மல்லாடத்
தாண்டு பரியேறும் சுத்தவி ராதிபர்போல்
பூண்டுசிலை வாளெடுத்துப் போர்தாவி - ஈண்டு ௨௨௭

---

௨௨०. எம்பிரான் தேவி : செல்வத் திருமகள். உம்பர் கோன் : தேவராஜன். உழுப்பை : பெரியோர்க்குப் படைக்கும் பண்டங்கள். பைம்பூகம் : பசுமையான பாக்கு மரம்.

௨௨௧. தாறு : காய் நிறைந்த கொத்து. தேறும் : தேறிய. ஊறு இரதம் : ரசம் ஊறுகின்ற.

௨௨௨. ஆமலகம் : நெல்லி.

௨௨௩. பொன் தமரத்தங் கனி : பொன் போன்ற ஒரு மரத்தின் பழம்.

௨௨௪. ஆலை : இயந்திரம். கன்னல் : கரும்பு. அடு பாகு : காய்ச்சிய கட்டி. மாலதி : சிறு செண்பகப் பூ.

௨௨௫. மது மலர் : தேன் சொட்டும் பூ.

௨௨௬. மல்லாட : மற் போர் செய்ய.

௨௨௭. பரி : குதிரை.

Koviloor Digital Library

கரையெங்கும் மள்ளர் களித்தார்க்க நன்னீர்த்
திரையெங்கும் அன்னம் செறியப் - பரவியே ௨௨௮

நெய்தல் நிலம்புகுந்து நெய்தல் தடம்படிந்து
மைதவழும் புன்னை வனம்சாய்த்துக் - கைதைமடல்

கூடிப் புளினமெலாம் சுற்றிப் பெரும்பனையைச்
சாடிப் புளினம் தனையோட்டி - நீடுற்ற ௨௩௦

மாதரங்க முந்திவலை வாணர் இளம்பருவ
மாதரங்க முந்திவலை வாய்முகந்து - தாதவிழ்ந்து

பானலம்பு நைந்துவரி பாய்மரம்சுழன்றுவிழ
மீனினங்கள் சிந்தியலை வீசிமொண்டு - கானலெங்கும்

ஓடிக் கழிக்கரையில் ஒல்லைப் பெடைக்குருகை
மூடிச் சுழித்தலையில் மூழ்கப்போய் - நாடிக்கண்டு

---

௨௨௮. மள்ளர் : உழவர். களித்து ஆர்க்க : நீர்ப் பெருக்குக் கண்டு மகிழ்ந்து ஆரவாரம் செய்ய.

௨௨௯. நெய்தல் நிலம் : கடல் சார்ந்த தரை. தடம் : தடாகம். மை : மேகம். புன்னை வனம்: புன்னை மரக்காடு. கைதை : தாழை.

௨௩௦. புளினம் : சோலை. புளினம் : புள் இனம், பறவைக் கூட்டம்.

௨௩௧. மாதரங்கம் : பெரிய அலை. வலை வாணர் : வலையினால் வாழ்கின்றவர்; அவர் வலையர், அல்லது செம்படவர். மாதர் அங்கம் உந்தி : மங்கையர் உடம்பிலே நீரைச் செலுத்தி. வலைவாய் முகந்து : வலையை நீர்முகச்செய்து.

௨௩௨. பானல் அம்பு நைந்து : நீலோற்பலம் போன்ற கண் அம்பு வருந்தி. வரி பாய்மரம் : கட்டப் பட்ட பாய்மரம். கானல் : கடற்கரைச் சோலை.

௨௩௩. கழிக்கரை : சதுப்பு நில ஓரம். ஒல்லை : விரைந்து. பெடைக் குருகு : பெண் நாரை.

Koviloor Digital Library

அந்த வருணன் அடிவணங்கிக் காணிக்கை
தந்த தரளம் தனைப்புனைந்து - செந்தமிழ்க்கு
மாறாத செங்கை வருணகுலா தித்தனென்று
கூறா தவர்போல் குறைவுற்றுப் - பேறுன ௨௩௫
சங்கம் நிகழ்நாகைத் தாருவைச்சே ராதவர்போல்
பங்கம் புனைந்து பயன்எய்திப் - பொங்குதுழாய்த்
தேம்பதும நாபத் திருமால்போல் சங்கேந்திப்
பாம்பணையின் மேவிப் படியளந்து - மேம்படுசொல்

நாடு

அச்சுதனுர் சங்கேந்து அமலனுர் மன்மதனை
மெய்ச்சுதனு கப்படைத்த வேந்தனுர் - நச்சரவில்
கண்துயில்வார் மூதண்டம் காத்தருள்வார் தேன்சொரியும்
வண்துளவார் சீரங்க மாநகரும் - எண்திசையோர்
வந்திக்கும் தென்குடந்தை மாநகரும் தேவரெலாம்
சிந்திக்கும் மாமகஞ்சேர் தீர்த்தமும் - முந்தவே ௨௪௦

---

௨௩௪. தரளம்: முத்து.

௨௩௫. ஆறு, கடைசியாகக் கடலில் விழுந்து குறைந்துவிட்டது. எப்படி? தமிழிக்கு உதவும் வள்ளல் வருண குலாதித்தனைப் பாடாதவர்போல.

௨௩௬. நாகைத் தாரு: நாகையிலுள்ள கற்பகம். அத்தாருதான் வருண குலாதித்தன். பங்கம்: கேடு.

௨௩௮. மெய்ச் சுதன்: உண்மை மகன். வேந்தன்: திருமால். திருமாலுக்கு மன்மதன் மகன் முறை. அரவு: பாம்பு.

௨௩௯. மூது அண்டம்: பழமை வாய்ந்த உலகம்.

௨௪௦. வந்தித்தல்: வணங்குதல். குடந்தை: கும்பகோணம். தீர்த்தம்: மகா மகக் குளநீர்.

தைப்பூசம் ஆடக் தருமெல்லை வெள்நிற
மெய்ப்பூசச் சொன்ன விடைமருதும் - எப்போதும் உ௪க

ஏத்துகின்ற சுந்தரனார் ஏவஇரு ளில்தூதாய்
ஆத்திமுடி யோன்சென்ற ஆரூரும் - வாய்த்த

திருப்பதிகள் உள்ளவெலாம் சேவித்தார் செந்தேன்
மருப்பதியும் தண்டலையுள் மன்னி - விருப்பமுடன்

வேந்தர் கிளைதழைக்க வேதாக மந்தழைக்க
ஆய்ந்த வணிகர் அறந்தழைக்க - ஏய்ந்த

உழவர் குலந்தழைக்க உண்ணமுர்தம் ஊறும்
விழவும் திருநாள் விழாவும் - அழகாம் உ௪ரு

மறைநெறியும் செல்வமும் வண்தமிழ்ப்பா ராட்டும்
அறுதிலமும் தன்மா சனமும் - தினகரனார்

தின்மைக் குலத்துதித்த செம்பியர்கோ மான்புரக்கும்
வண்மையுடைச் சோழ வளநாடன் - பண்மருவும்

நகர்

பாடலும் நாடக சாலையும் பைந்தொடியார்
ஆடலும் சூழ்கின்ற ஆலயமும் - நீடு

பணிக்கோ புரநிரையும் பைம்பொன் மதிலும்
மணிக்கோ புரமேடை வைப்பும் - கணக்காயர் உ௪கூ

உ௪க. விடைமருது : திருவிடைமருதூர்.

உ௪உ. சுந்தரனார் : சுந்தர மூர்த்தி சுவாமிகள். ஆத்திமுடியோன் : ஆத்தி மலர் சூடிய சிவனார். ஆரூர் : திருவாரூர்.

உ௪௩. மருப் பதியும் : வாசனை படியும். தண்டலை : சோலை.

உ௪சு. தினகரன் : சூரியன்.

உ௪எ. செம்பியர் கோமான் : சோழ மன்னன். பண் : இசை.

உ௪கூ. நிரை : வரிசை. கணக்காயர் : நூல் சொல்லிக் கொடுப்போர்.

Koviloor Digital Library

கூட்டமும் முத்தமிழின் கோதாட்டும் நல்விருந்தின்
தேட்டமும் பாராட்டும் சீராட்டும் - கோட்டு ௨௫0

வனசத் திரமுகப்பும் மாமறையோர்க் கெல்லாம்
தினசத் திரமுதவும் சீரும் - அனந்தின்

குலந்தா மரைமேல் குலாவும் குளமும்
நலந்தான் மிகுந்த நதியும் - அலர்ந்த

அளகா புரியும் அமரேசன் ஊரும்
பளகாகச் செல்வம் பரித்து - வளமேவும்

செந்நெல்லும் பூகமும் தின்கரும்பும் சந்ததமும்
பன்னுவள நாகைப் பதியினான் - ஒன்னலரைச்

மாலை

சாடுகின்ற வேல்வீரன் தன்மார்பு அனுதினமும்
சூடுகின்ற வாகைத் தொடையினான் - கூடலரைப் ௨௫௫

பரி

பேயுங் கழுகும் பெருவிருந்து கொண்டாடப்
பாயும் கவனப் பரியினான் - ஆயும் ௨௫௬

---

௨௫0. முத்தமிழ் : இயல், இசை, நாடகம். கோடு : சிகரம்.

௨௫௧. வன சத்திரம் : வனப்பொருட்சாலை. மறையோர் : மறைபயில் மக்கள்.

௨௫௩. அளகாபுரி : குபேரன் ஊர். அமரேசன் ஊர் : அமராவதி. பளகாக : குறைவு உடையதாக. பரித்து : தாங்கி.

௨௫௪. சந்ததமும் : எப்பொழுதும். பன்னு : நெருங்குகின்ற. நாகைப்பதி : நாகைப்பட்டினம் என்ற ஊர். ஒன்னலர் : எதிரிகள்.

௨௫௫. சாடுதல் : அழித்தல். வாகைத் தொடை : வெற்றி மாலை. கூடலர் : பகைவர்.

௨௫௬. பாயும் : பாய்கின்ற. கவனம் : வேகத்தை யுடைய. பரி : குதிரை. ஆயும் : ஆராயும்.

Koviloor Digital Library

யானை

அருந்தமிழோர் சொற்படியே ஆறுறுப்பும் பாரைப்
பொருந்திமதம் மூன்றும் பொழிந்து - திருந்தார் ௨௫௭
படைக்கலந் தாளாக்கிப் பாகரைக்காய்ந் தோடி
நடக்கும்மன வேகமென நாடி - இடிக்கும்
உருமேறு எனமுழங்கி ஒன்பான் முழம்பெற்று
அருமேக நிரை அருந்தி - வருமேரு
என்னவரி வண்டின் இனந்தொடரக் கோபமே
மன்றும் அயிராவதத்தினன் - மன்னி ௨௬௦

கொடி

இலகுகடற் பாரில் எதிரில்லை என்றே
குலவு மகரக் கொடியான் - நிலைமைபெறும்
ஈகை வதுவைஜெயம் என்றேதன் முன்றிலிடை
மோகஞ்செய் மூன்று முரசினன் - நாகமதி

ஆணை

சூடுகின்ற செய்யசடைச் சோதியார் அம்பலத்துள்
ஆடுகின்ற நாதர்திரு ஆணையான் - நீடும் ௨௬௩

---

௨௫௭. ஆறு உறுப்பும் பாரைப் பொருந்தி: ஆறு அங்கங்களும் பூமியைத் தொட்டு. திருந்தார் : மாற்றார்.

௨௫௯. உருமு ஏறு : ஆண் இடி. ஒன்பான் முழம் : ஒன்பது முழ உயரம். வரும் மேரு : நடக்கும் மேரு மலை.

௨௬௦. அயிராவதம். இந்திரனது வெள்ளை யானையின் பெயர்.

௨௬௧. மகரக்கொடி : மீன் கொடி.

௨௬௨. ஈகை : கொடை. வதுவை : மணம். ஜெயம் : வெற்றி. இம்மூன்றினையும் முழக்கும் முரசுடையவன். " வண்மை என்றும், தோன்றவரு வெற்றி என்றும் சூடிய கல்யாண மென்றும், மூன்றாய் முழங்கும் முரசினன்." என்று சேதுபதி விறலி விடு தூதிற் கூறப்படுவது இதனோடு பொருந்துவது.

௨௬௩. நாதர்திரு ஆணையான் : சிவபெருமான் வழிப்படி ஆணை செலுத்துபவன்.

Koviloor Digital Library

கடலுக் கரசன் கனங்குழலார் நீட்டும்
மடலுக் கிசைந்த வடிவன் - அடலுக்குத் உசுச

தோற்றியவேல் வேந்தர் தொல்விருதெ லாம்இமைப்பில்
மாற்றிய விரவடி வாளினன் - ஏற்றுக் உசுரு

கொடியான் தனக்குக் குலக்கொடியை நல்கி
வடியாப் புகழ்படைத்த வள்ளல் - படியாளும்

கோமான் எனவாழ் குருகுலத்தோர் கோத்திரத்தில்
மாமால் அனைய மநுதுங்கன் - பூமிது

மண்டலிகர் கொண்டாடும் மானகுல சீலபரன்
தண்டமிழ்வல் லோர்கிளையைத் தாங்குவோன் - [மண்டலத்தில்

தஞ்சமென வந்தோரைத் தப்பாமல் எப்பொழுதும்
அஞ்சல்எனக் காக்கும் அபயத்தான் - கஞ்சத்

திருவளரும் மார்பன் திருமலை ராய
வருணகுலா தித்த மகிபன் - சுரபி உஎ0

உசுச. கனம் குழலார் : கனத்த கூந்தலையுடைய காரிகையார். நீட்டும் : எழுதும். அடல் : பெருமை.

உசுரு. இமைப்பில் : கண் மூடுவதற்கு முன்னே. ஏறு : விடை.

உசுசு. கொடியான் : கொடியையுடையவன்; அவன், சிவன். குலக்கொடி : பார்வதி. மலைமகள் பிறந்த குலம் உடையான் வருண குலாதித்தன் என்பது கருத்து. வடியா : வற்றாத. படி : பூமி.

உசுஎ. மாமால் : கண்ணன். மநுதுங்கன் : மக்களில் சிறந்தவன்.

உசுஅ. மண்டலிகர் : அரசர். சீல பரன் : ஒழுக்கத்தில் மேம்பட்டவன். கிளை : சுற்றம். மண்டலம் : உலகம்.

உசுக. தஞ்சம் : அடைக்கலம். அஞ்சல்: பயப்படாதே. கஞ்சம் : தாமரை.

உஎ0. திருவளரும் மார்பன் : மகா விஷ்ணு. சுரபி : காமதேனு.

Koviloor Digital Library

அலைய கொடையான் அவதியிடா த்யாக
கனக வனச கரத்தான் - அனவரதம் உஎக
கோனேரி ராஜ வருணா குலாதித்தன்
தானா பரணா ஜயதுங்கன் - தேனுரும்
தாரான் இளை தழைக்கத் தந்த திருப்புதல்வன்
வீர கருணா வேற்கரத்தான் - சீரார்
வருணகுலா இத்தனுக்கு மைந்தன்என வாழ்வு
தருமபிரா மன்கனக தாரு - திருமருவும்
வள்ளல் அலையகொடை மங்காமற் காத்தானுக்கு
உள்ள திருத்தமையன் உத்துங்கன் - தெள்ளும் உஎரு
இருமரபும் துய்யான் இயல்இசைகள் வல்லான்
ஒருமொழியே சொல்லும் உதாரன் - பொருசமரில்
வாங்கு சிலைவிஜயன் மார்த்தாண்டன் வாளபிமன்
ஓங்கும் அடல்மா ஒளிருநயன் - நீங்குநெறி உஎஎ

உஎக. அவதி : எல்லை. கனகம் : பொன். வனச கரத்தான்: தாமரையனைய கையுடையான்.

உஎஉ. தானாபரணன் : தானத்தையே ஆபரணமாகப் பூண்டவன். கோனேரி ராஜ வருணா குலாதித்தன், பாட்டுடைத் தலைவனின் தந்தை.

உஎச. கனகதாரு : பொன் காய்க்கும் மரம்.

உஎரு. காத்தான் என்பவனுக்கு இவன் அண்ணன். உத்துங்கன் : உயர்ச்சியுடையவன்.

உஎசு. இரு மரபு : தாய் தந்தையரின். இரு வழி. ஒரு மொழி : ஒரே பேச்சு.

உஎஎ. வாங்கு சிலை : வளைந்த வில். விஜயன்: அர்ச்சுனன். மார்த்தாண்டன் : சூரியன். வாள் அபிமன் : வாளில் வல்ல தனஞ்செயன் மகனாகிய அபிமன்யு. அடல்மா : வெற்றிக் குதிரை.

Koviloor Digital Library

சொல்லாத ஆக்கினைக்குச் சுக்ரிவன் மூதண்ட
வில்லாளன் வெண்ணீற்று மேனியான் - சல்லாப உஎஅ
மாதர்இரு கண்ணும் மனமும் திறைகொள்ளும்
பூதர வீர புஜத்திறன் - ஓதும்
தரணிபரி பாலன் சமரமுக வீரன்
கருணை பரிமளிக்கும் கண்ணன் - பரவும் உஅ0
அடித்தவருக் காதாரன் அன்னசத்ர சோமன்
கொடுத்துவழி காட்டும் குரிசில் . தொடுத்துவிடும்
பூந்தா மரைமுதலும் பூவாளி யுங்கரும்பும்
ஏந்தாத செவ்வி எழிற்காமன் - மாந்தாதா
ஆரும் தரிசித் தளவே அவரவர்தம்
பாரம் பரையறியும் பண்பாளன் - தீரன்
அனகன் அபயன் அமலன் அசலன்
கனக சரண கமலன் - நினைவும் உஅச

உஎஅ. வெண்ணீற்று மேனியான்: திருநீறு பூசிய திருமேனியன்.

உஎகூ. திறை : கப்பம். பூதரம் : மலை. புஜம் : தோள்.

உஅ0. தரணி பரிபாலன் : பூமியைக் காப்பவன். சமரமுகம் : போர்முனை.

உஅஉ. மலரம்பும் கரும்பு வில்லும் தாங்காத அழகிய மன்மதன்.

உஅஙு. யாரையும் கண்ட மாத்திரத்தில் அவரவர் குணம் செயல் ஆதி எல்லாவற்றையும் ஊகித்தறியக் கூடிய அதி சாமர்த்தியவான்.

உஅச. அனகன் : அழகன். அபயன் : அபயங் கொடுப்பவன். அமலன் : குற்றமற்றவன். அசலன் : சலிப்பில்லாதவன். கனக சரண கமலன் : பொற்றாமரைத் திருவடியான்.

Koviloor Digital Library

சதுர மொழியும் மரபும் இனிய
மதுர விரக சரசன் - அதுலன்
இளமை வயதில் இயலும் இசையும்
வளமை புகழும் மகிபன் - அளிகொள்
தருமம் உரிமை தருதி மிகுதி
அருமை வரிசை அமைவு - பெருமை
உடையான் இனியன் உலகில் எவரும்
அடைய விழையும் அழகன் - மடல்இதழித்
தாமச் சடிலனம்பு சாத சரணனன்று
காமப் பயலைவென்ற காளகண்டன் - தேமுற்ற
மாலைக் குழலிபங்கன் மானைக் கரத்தணிந்த
கோலப் பரமனன்பு கூர்துங்கன் - மேலிட்ட
கோரக் கடிவாகும்ப கோல த்ரிகடதுங்க
வீரச் சமரதந்தி மேலுதயன் - நேருற்ற
சற்புருஷ மேருவர சர்க்குமண வாளனிறை
அற்புத சொரூபன்அகி லப்பிரசன் - நற்பதுமை
ஒக்கலினை யாடுபவன் உத்தமர்கி பாசரிதன்
மைக்கொடைகு லாவுமொரு வச்ரதரன் - மிக்கதொரு

---

௨௮௬. அளி : கருணை.

௨௮௮. இதழி : கொன்றை.

௨௮௯. தாமம் : மாலை. சடிலம் : சடை. அம்புசாதம்: தாமரை. பயல்: எமப் பயல். காளகண்டன்: நஞ்சைக் கழுத்திலே பெற்ற சிவன்.

௨௯௦. குழலி பங்கன் : உமையைப் பாகத்திலே பெற்றவன். மேல் இட்ட : உரித்துப் போர்த்திய.

௨௯௧. த்ரிகடம் : மும்மதம். சமரதந்தி : போர் யானை.

௨௯௩. மைக்கொடை : மாரி போன்ற வண்மை.

Koviloor Digital Library

நட்டகுல காலன்ஒரு சொற்கபடி லாமிருபன்
வட்டஉல காளும்மதி லப்ரபலன் - கட்டவிழ்சேர் உ௬௪

வள்ளல் இருபத் திரண்டாக மாநிலத்தோர்
எள்ளரிய மூதம் எட்டாகத் - தெள்ளுதரு உ௬௫

ஆறுகச் சங்கத்தார் ஐம்பதின்மர் ஆகமதி
விறுக வந்துதித்த வேல்வீரன் - பெறும்

அருணநெறி சேகரந்தான் அச்சுத ராய
வருணகுலா தித்த மகிபன் - கிரணமிகும்

கார்மதித்த நற்கொடையான் காதலுடனேசக்ர
பார்மதித்த நாகைப் பசுங்காவில் - ஏர்மதித்த உ௬அ

உ௬௫. தலைஏழு வள்ளல், இடைஏழு வள்ளல், கடைஏழு வள்ளல் என முன்னர் மூவேழு இருபத்தொரு வள்ளல் இருந்தனர்; இப்போது வருண குலாதித்தனைச் சேர்த்து இருபத்திருவர் ஆகிவிட்டனர். மூதம் ஏழை இவன் எட்டாக்கிவிட்டான். மூதம்: மேகம். தெள்ளு தரு: கேட்டது கொடுக்கும் தேவமரங்கள்.

உ௬௬. தேவதாரு, இதுவரை ஐந்தே இருந்தன. அவற்றை ஆறாக உயர்த்தி விட்டான் இந்நாகைப் பதி யான். மதுரையிலே சங்கம் இருந்து தமிழ் ஆராய்ந்த சிவ பெருமான் உள்ளிட்ட நாற்பத்தொன்பது புலவர்கள் இப்போது ஐம்பது பேர் ஆகிவிட்டனர், இத் தென் நாகைக் கோமானையும் சேர்த்து.

உ௬எ. அருண நெறி: செம்மை வழி. கிரணம்: ஒளி.

உ௬அ. கார்: மேகம். நாகைப்பசுங்காவில்: நாகை நகரப் பசுமை மிக்க பூஞ்சோலையில்.

(வருண குலாத்தித்தனை இதோடு ஒருவாறு விட்டு, இனி முதலில் வர்ணிக்கப் பட்ட அந்தக் கட்டழகியிடம் போகவேண்டும். நாகைப் பசுங்காவில்தான் அந்த மோகி னியை அவன் கண்டது. அவள் வயாகி அழியும் அவன் பரிதாப நிலையைப் பார்க்கலாம்.)

Koviloor Digital Library

காட்சி

பொன்போல் மரகதம்போல் பூமயில்போல் வானுலவு
மின்போல் தரள விளக்குப்போல் - என்போல்வார் உகூகூ

ஆருயிர்போல் தெய்வ அரம்பைபோல் ஆவிகொளும்
சூரியன் மாதர் சுவடுபோல் - கூரியவன்

கண்போல் கவுஸ்துவம்போல் காகோதர நாட்டின்
பெண்போல் ஒளிரும்ப்ர வாளம்போல் - நண்போதும்

மந்ரமுயிர் பெற்ற செயல்போல்வி சித்திரம்போல்
அத்ரமதன் செங்கோல் அரசுபோல் - முத்திறமாய்த்

தோய்ந்த தமிழின் சுவைபோல் அரன்விழியால்
சாய்ந்த அரசு தழைக்கவே - ஆய்ந்துவரும்

ஏந்திழைபோல் முக்கனிபோல் இன்அமுது போல்மதுரம்
சாய்ந்து நறுங்குழற்கீழ்த் தள்ளாடி - ஏந்தும்

இரண்டு குடம்போலும் இருதனங்கள் தாங்கி
மருங்கு துவண்டு வருந்த - நெருங்கிவந்து

நிற்பாரைக் கண்டு நெடிதுயிர்த்துத் தெய்வமே
இப்பாரில் வந்தஇவர் யாரென்று - பொற்பாமஎன் ௩௦௬

உகூகூ. மரகதம் : பச்சை. தரளம் : முத்து.

௩௦௦. தெய்வ அரம்பை : தெய்வப் பெண். கூரிய : கூர்மையான.

௩௦௧. கவுஸ்துவம் : திருமால் அணியும் ஒரு மணி. காகோதரநாடு : நாகர் வாழ் லோகம். அந்நாட்டுப் பெண்: நாக கன்னிகை.

௩௦௨. அத்ரம் : அஸ்திரம். முத்திறம் : இயல் இசை நாடகம் என்னும் மூன்று வகை.

௩௦௩. அரன் விழி : சிவனின் நெற்றிக் கண்.

௩௦௫. மருங்கு : இடுப்பு.

௩௦௬. நிற்பாரை : நிற்கின்ற அணங்கனுரை. நெடிதுயிர்த்து : பெருமூச்சுவிட்டு.

Koviloor Digital Library

நெஞ்சம் கலங்கி நிலைவழியும் வேலையினில்
கஞ்ச மலரடியும் கண்இணையும் - தஞ்சமென ௩௦௭
அஞ்சல் புரிய அதுவே வரமாக
வஞ்சம் அறமகிழ்ந்து வாய்திறந்து - விஞ்சலுறும்

காதற்பேச்சு

தேனே மதன திரவியமே செங்கமல
மானே அநுராக வல்லியே - கான்உறும்
கொந்தளக பந்தி குலைந்தாடக் குன்றின்நிமிர்
சந்தளவு பாரத் தனமாட - உந்திஎழும்
வள்ளை இரு தண்டின் மகரக் குழையாடப்
புள்ளலைய வேற்கண் புரண்டாட - மெள்ள
மருங்குல்ஒசிந் தாட மணிவடங்கள் ஆட
அருங்கமல மாமுகம்வேர் வாடப் - பெருங்கழங்கோடு
அம்மனைப்பந் தாடி அடியேன் மருண்டாட
இம்மனையில் ஆடும் இயல்இருக்கத் - தொம்என்று ௩௧௩

---

௩௦௭. தஞ்சம் என : அடைக்கலம் என்று.

௩௦௮. அஞ்சல் புரிய : அபயங் கொடுப்ப. விஞ்சல் உறும் : மேம்பாடு உற்ற.

௩௦௯. அநுராகம் : ஆசை. கான் : மணம்.

௩௧௦. கொந்தளகபந்தி : கொத்தான கூந்தல் வரிசை. குன்றின் நிமிர் : மலையைப்போல நிமிர்ந்திருக்கின்ற. சந்து அளவு : சந்தனம் அப்பிய. பார் : பெரிய.

௩௧௧. வள்ளை : காதுக்கு உபமானமான ஒரு இலை. குழை : காதணி. புள் : வண்டு.

௩௧௨. வேர்வாட : வியர்வை அரும்ப. கழங்கு : பந்துபோன்ற விளையாடும் கருவி.

௩௧௩. அம்மனை : அதுவும் கழங்கு போன்ற விளையாடும் கருவியே. மருண்டாட : மயங்கி ஆட. 'தொம்' ஒலிக் குறிப்பு.

Koviloor Digital Library

வட்டத்தில் பாடி மணியூசல் ஆடுவீர்
இட்டத்தி லேயிருக்க என்னிரோ - துட்டமதன்

அம்பும் உமதுவிழி அம்பும் மிகப்பொருதால்
நம்புமடி யேற்கேது நன்னுதலே - கொம்பில் ௨௧௫

குயிலால் நொடிந்து கொதிக்குமதிக் கோடை
வெயிலால் வெதும்பி விடவோ - புயலோர்

உமது குழற் காவணத்தின் உற்ற நிழற்கீழ்
அமையும் இடந்தருவீர் - எமைமருவிக்

கொங்கையா னைக்கோட்டால் குத்தாமல் சித்தசனூர்
வெங்கையா னைக்கிடுதல் மேம்பாடோ - திங்கள்முகம்

காட்டிவீர் நாளும்அது கண்டேன் மயல்மூட்டி
வாட்டிவீர் என்னை மறஞ்செய்தீர் - காட்டுக்கு

எறிந்தநில வாக்கினீர் என்வசனம் மாயக்
குறைத்தமரம் ஆனேன் கொடியேன் - மறித்தோர் ௨௨௦

அருள்வசனம் கூறுவதும் அத்திப்பூ ஆமோ
மருள்வசனம் யான்மொழிதல் மாண்போ-பொருளோ ௨௨௧

---

௨௧௫. அடியேற்கேது : எனக்கு வாழ்வு ஏது. கொம்பு : மரக்கிளை.

௨௧௬. புயல் : மேகம்.

௨௧௭. குழற் காவணம் : கூந்தலாகிய கொட்டகை.

௨௧௮. கொங்கை யானைக் கோடு : கொங்கையாகிய யானைத் தந்தம். சித்தசனூர் : மன்மதனூர். அவன் கையிலுள்ள யானையாவது, யானைக்கு வேழம் என்று ஒரு சொல் உண்டு. வேழம் என்றால் கரும்பு என்பது பொருள். கரும்பு மதன் வில்.

௨௧௯. மறம் செய்தீர் : மறக்கருணை செய்தீர்.

௨௨௦. மாயக் குறைத்த மரம் : பட்டுப்போக வெட்டிய மரம். மறித்து ; தடுத்து. ஓர் : ஒரே ஒரு.

௨௨௧. அருள்வசனம்: கருணைப் பேச்சு. அத்திப் பூ, அபூர்வமாகவே பூக்கும். அத்தி பூத்தாப்போல என்பது பழமொழி.

Koviloor Digital Library

மொழியீர் மொழிந்தால் முத்துதிரு மோகற்பு
அழியீர் அதனால் அணங்கே - செழியீர் ௩௨௨

மதன்உபதேச சம்பன்னி வாழ்விப்பீர் என்றன்
விதனமெலாம் மாறி விவேகம் - முதலாப்

பணிவாருக் காசைநெடும் பாம்புவிஷங் கொண்டால்
மணிவாய் மருந்துதவ மாட்டீரோ - தணியாத

வல்இரும்பும் கல்லும் வயிரம்ஒவ்வொன் றுக்கிளகும்
புல்இருந்து விதி புறப்படினும் - வல்லமையால் ௩௨௫

எப்படிசொன் னாலும் இளகாது உமதுமனம்
மைப்படியும் கூந்தல் மடந்தையீர் - இப்படியில்

உம்நெஞ்சம் என்நெஞ்சாய் உற்று நடுநடுங்கும்
என்நெஞ்சம் உம்நெஞ்சாய் எய்தாதோ - முன்னம்

உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பென்று - எடுத்ததிரு

வள்ளுவனார் சொன்னகுறள் வாராதோ வந்தாக்கால்
எள்ளளவும் நெஞ்சம் இரங்காதோ - கள்ளமதன்

செங்கோலும் ஆக்கினையும் செல்லுமோ நீருணர்ந்தால்
பைங்கோ கனகம்உறு பாவையே - இங்கேதான் ௩௩௦

---

௩௨௨. செழியீர் : செழுமையானவரே!

௩௨௩. விதனம் : வருத்தம்.

௩௨௪. ஆசைப் பாம்பின் நஞ்சு தலைக்கேறிவிட்டது. மணிவாய் மருந்து - செங்கனிவாய் இதழ் அமுதம் தர மாட்டீரோ?

௩௨௭. உங்கள் மனம் என் மனம் ஆகி என் மனம் உங்கள் மனம் ஆகக்கூடாதா?

௩௨௮. உடுக்கை : ஆடை. இடுக்கண் : துன்பம்.

௩௩௦. ஆக்கினை : ஆணை. கோகனகம் : தாமரை. அதில் இருக்கும் பாவை இலக்குமி.

Koviloor Digital Library

தாதத்வம் சொல்லவோ தாங்கவோ நிர்கிணையிர்
ரதல் தவிர்ந்ததிலை இன்பமோ - சீதளித்து ௱௰௧
வாசமிலாக் காரும் வளம்விளர்த்துத் தேய்பிறையும்
பூசல் இலதேல் குனியாப் பொற்பிலையும் - ஆசனவும்
தைத்துப் பிளக்கறியாத் தன்மையியி லாவேலும்
வைத்த பயத்திலூறு வள்ளையும் - மொய்த்தநறை
கூடியமென் சிற்றிளங்கால் கொண்டறிகி லாக்குமிழும்
ஆடை அமுதுதவா ஆம்பலும் - வாடிக்
குவிந்தலரும் தாமரையும் கோடுமுகச் சங்கும்
அவிந்துவளை வெய்தும் அமையும் - சிவந்தகுறி ௱௰௫
காட்ட அறியாத காந்தளும் குங்குமச்சேறு
ஆட்டப் புளகித்து அறியாத - கோட்டானைக் ௱௰௬

௱௰௧. தாதத்வம் : அடிமை நிலை. சிதளித்து : குளிர்ந்து.

௱௰௨. வாசமிலாக் கார் : மணமில்லாத மேகம். வளாம் விளர்ந்துத் தேய் பிறை : நிறம் வெளுத்துத் தேய்கின்ற சந்திரன். பூசல் இலதேல் குனியாப் பொற் பிலை: போர் இல்லையானால் வளையாத அழகிய வில். ஆசு அளவும் : அடிப்படை வரையும்.

௱௰௩. வேல் : வேலாயுதம். பயம் : நீர். வள்ளை : ஓர் கொடி. நறை : தேன்.

௱௰௪. மென் சிற்றிளங்கால் : மென்மையான இளம் தென்றல் காற்று. ஆடை அமுது : ஆடைப்பால். ஆம்பல் : செவ் ஆம்பல் பூ.

௱௰௫. கோடுமுகச் சங்கு : வளைந்த முகத்தைக் கொண்ட சங்கம். அமை : மூங்கில்.

௱௰௬. காந்தள் : காந்தட்பூ. புளகித்தறியாத : மயிர்க்கூச் செய்தி அறியாத.

Koviloor Digital Library

கோடும் ஒரு வழியில் கூடாக் கரும்பாம்பும்
பாடுகரு தாதவட பத்திரமும் - ஆடவர்கள் ௩௩௭
தக்கமனம் வேறாகித் தாஞ்சுழல வேகிலையாய்
நிற்க அறியாத நீர்ச்சுழியும் - விற்கோன்
நிலைப்பாடு மேவாத நேரிழையும் முன்பு
செலப்பா கரையுடைய தேரும் - குலைக்குறிய
வாழையுங் காணா வளையில் விழுநெண்டும்
தாழும் வராலும் சரிகுறையில் - விழும் ௩௪௦
தராசுமடி பட்டுத் தளர்பந்தும் செம்மை
இராதவியற் கூர்மத் தெழிலும் - பராமரித்தே
பத்து மதியும் பலவடுவாய்க் காயாமல்
மத்தியத்தில் வந்துதவும் மாந்தளிரும் - மொய்த்துமலர்
நீண்டகுழல் நெற்றி நெறிபுருவம் கண்காது
காண்தகைய நாசிவாய் கந்தரம்தோள் - பூண்டகரம் ௩௪௩

---

௩௩௭. கோடு : தந்தம். கரும்பாம்பு : கரிய நாகம்; இது வயிற்று மயிர் ஒழுங்குக்கு உபமானம். பாடு : பெருமை. வடபத்திரம் : ஆலிலை.

௩௩௮. நீர்ச்சுழி : நீர்ச் சுழற்சி; இது கொப்பூழுக்கு உவமை.

௩௩௯. நேர்இழை : நேரான நூல்; இது இடைக்கு உவமானப் பொருள். குலை : தாறு. குறிய : சிறிய.

௩௪௦. வாழை, துடைக்கு ஒப்பு. நெண்டு: நண்டு. சரிகுறையில் : சமம் குறைந்தால். விழும் : தாழும்.

௩௪௧. தராசு பரட்டுக்கும், பந்து குதிக்கும், ஆமை புறங்காலுக்கும் உவமானங்கள். கூர்மம் : ஆமை.

௩௪௨. பத்து மதி, பத்து விரல்களுக்காக. மாந்தளிர் உள்ளங்காலுக்கு.

௩௪௩. குழல் : கூந்தல். நெறி : அடர்ந்த. நாசி : மூக்கு. கந்தரம் : கழுத்து.

கொங்கைகுட ரோமம் குளிர்உதரம் உந்திஇடை
தங்குநிதம் பங்கவான் தன்முழந்தாள் - துங்கக் ௩௭௪
தளைக்கால் பரடுகுதிக் கால்புறந்தாள் இன்பம்
களிக்கும்எழில் உள்ளங்கால் கட்டே - இணக்கிப்
பெரியோர்கள் எல்லாரும் பேசும் அருள்போல்
சரியாத என்றும் தருமோ - அரிவையே
ஓடாத மானே உரையாத செம்பொன்னே
வாடாத பூவே மரகதமே - தேடக்
கிடையாத பஞ்சவர்ணக் கிள்ளையே கோது
படையாத புல்லகண்ட பாகே - நடைஆடும்
சித்திரமே காமன் திரவியமே மோகநற்ச
முத்திரமே கட்டாணி முத்தமே - அந்திரவேள்
ஆகமமே வாழ்வே அரசே அதிமதுர
போகமே யான்செய்த புண்ணியமே - மோகினியே ௩௮௦
கண்ணே விரகக் கருவிள மேஅமுதப்
பெண்ணே கலவிப்ர தாபமே - ஒண்ணுதலே
கேகயமே என்றென்று கீர்த்திப்பேன் வாழஅநு
ராகமியா கம்தந்தால் ஆகாதோ - வேகமதன் ௩௮௨

---

௩௭௪. உதரம்: வயிறு. உந்தி: கொப்பூழ். நிதம்பம்: குறி. கவான்: துடை.

௩௭௫. இணக்கி: பொருத்தி.

௩௭௬. தருமோ: தகுதியாகுமோ; தகாது என்பது கருத்து அரிவை: பெண்.

௩௭௮. கிள்ளை: கிளி. கோது: குற்றம். புல்லகண்டம்: வெல்லம்.

௩௮௧. கருவிளம்: கருவிளங்கனி.

௩௮௨. கேகயம்: மயில். கீர்த்திப்பேன்: புகழ் பாடுவேன். அநுராகம்: ஆசை.

Koviloor Digital Library

காவிக் கணையும் கரும்புவில்லும் நீர் தந்தால்
சேவித் துவகையாச் சேரேனோ - பூவுலகில் ௩௫௩
சொன்மருவு நின்கொங்கைத் துர்க்கத்தில் என்னை
[வைத்தால்
மன்மதனார் கொல்லவசம் ஆவேனோ - பொன்மயில்போல்
நின்றமா னேநீர் நிலமேலே நின்றபதம்
கன்றினால் என்னாவி கன்றாதோ - ஒன்றியரை
மாத்திரை இன்பம் மகிழ்ந்தெனக்குப் பாலித்தென்
கோத்திரமெல் லாமடிமை கொண்டருளீர் - பூத்திகழும்
தேனே பிறக்கும் ஜெனனமெலாம் யானடிமை
தானேஎன் மேல்திருக்கண் சாத்துவீர் - மானனையீர்
காத்தானை மார்பிற் கமலா சனத்திருவைச்
சேர்த்த வருணைகுலா தித்தனைச்சென்று - ஏத்தி
மகராஜன் என்றுரைக்க மாட்டாதார் செல்வம்
நிகராமோ வாலிபத்தின் நேர்தாம் - இகலாகி
மோனமே பண்ணி முனிந்திருந்தால் வீணிலே
போனநாள் மீண்டுவரப் போகுதோ - தேனனையீர் ௩௬௦
மாகோபம் உண்டேல்என் மார்மீதும் தோள்மீதும்
ஓகோதாள் கொண்டுதைக்க ஒண்ணாதோ - கோகிலமே

---

௩௫௪. துர்க்கம் : காவலமைந்த அரண்.

௩௫௫. கன்றினால் : வருந்தினால். ஒன்றி : பொருந்தி அரை : ஒன்றில் பாதி.

௩௫௬. பாலித்து : அருள்செய்து.

௩௫௮. கமலாசனத் திரு : தாமரைத் தையல்.

௩௫௯. நாகைக்கோனைப் புகழாதார் செல்வம் விரைவில் அழிந்துவிடும்; அதற்குக்கூட ஈடாகாது வாலிபப் பருவம். அதனினும் விரைந்து இளமை போய்விடும்.

௩௬௧. மாகோபம் : பெருஞ்சினம். தாள் : கால். கோகிலம் : குயில்.

மன்றுளை வைத்தாலும் வையும்இனி உமையாளை
என்றுளை கோபம்வராக் கில்லையே - மின்னனையீர் ௩௬௨
நற்றிக்கண் ணேறுகொண்ட நற்கனிவாய் ஊறலிலே
சற்றுந்தொட் டுத்தெறித்தால் தாழ்வாமோ - பொற்
சேரீர் பவளத் திருவாய் மலர்ந்தொருசொல் [றெருடியீர்
தாரீர்என் தன்னைத் தனிபாரீர் - வாரீர்என்று

உள்ளம் இளகி உருகுகின்ற என்அளவில்
எள்ளளவும் நெஞ்சம் இரங்காமல் - மெள்ளவே ௩௬௫
இத்தனைநே ரந்தனியே யானுரைக்கும் விண்ணப்பம்
அத்தனையும் கேட்டுங்கே ளாதவர்போல் - கொத்துமலர்
பூட்டுவிலே மாரன் பொரநிற்கி றான்என்று
காட்டுதல்போல் சற்றே கடைக்கணித்து - கேட்டுமிக
வின்முறுவல் செய்து விளையாடித் தம்மிலே
புன்முறுவல் செய்தருளிப் போயினார் - மன்மதனும்

போனபின் தடுமாற்றம்

வெங்காதல் பூணும் வெகுரா ஜதநடையும்
சிங்காரப் பின்னழகும் சேவித்தேன் - மங்கைநல்லார்
மண்ணிலே தோயஅடி வைத்தசுவடு அத்தனையும்
கண்ணிலே ஒற்றிஒற்றிக் காமுற்றேன் - ஒண்ணு
[தலாள் ௩௭௦

---

௩௬௩. நற்றி : நத்தி. கண்ணேறுகொண்ட என் மீது பாலொடு தேன் கலந்த நற்கனிவாய் ஊறலில் கொஞ்சம் தொட்டுத் தெறித்தால் ஒன்றும் குறைவந்து விடாது.

௩௬௭. கடைக் கணித்து : கடைக் கண்ணால் பார்த்து.

௩௬௮. வின் முறுவல் : ஒளிச் சிரிப்பு.

௩௬௯. வெங்காதல் : விருப்பக் காதல். வெகு ராஜத நடை. நேர்த்தியான ராஜநடை. சேவித்தேன். வணங்கினேன்.

௩௭௦. தோய : படிய. சுவடு : அடையாளம்.

Koviloor Digital Library

நின்ற நிலையும் நெறித்தபுரு வக்கடையும்
மன்றல்அள கம்செறிந்த மாலையும்-பொன்றனைப் ௩௭௧
பார்த்தபார் வைக்குள் பசப்பும் பசுந்தோளில்
போர்த்தபோர் வைக்கடங்காப் பூண்முலையும்-சீர்த்தவரை
வாட்டுகின்ற செந்தா மரைமுகமும் கஸ்தூரிக்
கோட்டு நுதலிற் குறுவேர்வும் - தோட்டுமலர்ப்
பூங்காவில் வந்த புதுமையும்என் கண்ணைவிட்டு
நீங்காமல் உள்ளறிவு நீங்கினேன் - ஓங்குதுயர்
கொண்டேன் வினையேன் கொடிஇடமாய் வந்தபலன்
கண்டேன் இதயம் கலங்கினேன் - அண்டிஎதிர் ௩௭௫
காணத் தவம்செய்த கண்போல்மற் றைம்பொறியும்
பேணத் தவஞ்செய்யப் பெற்றிலேன் - நாண்அழகு
குன்றினேன் ஆண்மை குலைந்தேன் துணைஇழந்த
அன்றில்போல் வாடினேன் அவ்வளவில் - ஒன்றறியாப்
பித்தன்இவன் என்றெனக்கோர் பேருண்டே ஆதலினால்
நித்தனிவன் என்று நினைவுற்றார்-சித்தசன்தான் ௩௭௮

---

௩௭௧. மன்றல்: மணம். அளகம்: கூந்தல். பொன்ற: உருக்குலைய.

௩௭௨. பூண்: ஆபரணம்.

௩௭௩. கஸ்தூரிக் கோட்டுநுதல்: கஸ்தூரியைக் கோடாகப் போடப்பட்ட நெற்றி. குறு வேர்வு: சிறு வியர்வை. தோடு: இதழ்.

௩௭௫. கொடி: காக்கை. அது இடமாக வருதல் நல்ல சகுனமல்ல என்பார்கள்.

௩௭௬. காணக் கண்கள் செய்த தவத்தை மற்றைப் பொறிகள் செய்யவில்லை. நாண்: நாணம்.

௩௭௭. அன்றில்: ஆணும் பெண்ணும் இணைபிரியா மல் வாழும் பறவை இனம்.

௩௭௮. நித்தன் - சிவபெருமான்.

Koviloor Digital Library

தண்டா நுதல்விழியாள் தான்பட்ட கண்கலக்கம்
உண்டான எல்லாம் உளத்தெண்ணித் - தெண்டிரைசூழ்

துங்க உலகில் சுரும்பையெல்லாம் நாணாக்கிச்
செங்கரும்பை எல்லாம் சிலையாக்கி - வெங்கலக ௩௮௦

மாகவனத் தோடே வளரும்அ சோகமெலாம்
சோகவன மாகத் துணர்பறித்துச் - சேகரித்து

முல்லையும் பேரின் முழங்கிசையும் பூரியும்விட்டு
எல்லையிற்பூ எல்லாம் எடுத்தேந்தித் - தொல்அயனுக்கு

உந்திக் கமலமலர் ஒன்றளித்துச் செந்திருவை
வந்திக்கு நாகையர்கோன் மார்பிருத்திச் - சந்திக்கும்

கோகனகம் உள்ளஎலாம் கொய்திரதி கண்போல்வ
ஆருமலர் மாவின் அலர்பறித்து - வாகையிற்போர்

ஆடிவிழ யம்புனைய அம்பாக்கித் தான்அந்த
கோடியுறு ரூபம் கொண்டெய்தி - நீடுலகில் ௩௮௫

ஒப்புறுப் பாவி உடலந் தனைத் தனக்கோர்
அப்பறுத் தூணிநிகர் ஆக்கினான் - மெய்ப்படவே ௩௮௬

---

௩௭௯. தண்டா : குறையாத. நுதல் விழி : நெற்றிக் கண். தெள் திரை : தெளிந்த கடல்.

௩௮௦. சுரும்பு : வண்டு. நாண் : விற் கயிறு. சிலை : வில்.

௩௮௧. துணர் : பூச்கொத்து.

௩௮௨. தொல் அயன் : பழைய பிரமன்.

௩௮௩. வந்திக்கும் : வணங்கத்தக்க. இருத்தி : இருக்கச் செய்து.

௩௮௪. கோகனகம் : தாமரை. இரதி : மன்மதன் காதலி. மாவின் அலர் : மாம்பூ. வாகை : வெற்றி.

௩௮௫. அனந்த கோடி ரூபம் : பல கோடி வடிவம்.

௩௮௬. ஒப்பு உறுப் பாவி. ஈடில்லாத பாவி. உடலந்தனை : என் உடம்பினை. அப்பு அறுத் தூணி: அம்புகள் நீங்காத கூடு.

Koviloor Digital Library

நொந்தேன் பரதவித்தேன் நோக்கினகா மாக்கினியால்
வெந்தேன்உள் ஆவி வெதும்பினேன்-நைந்தேன் - ௩அ௭

விழுந்தேன் அயர்ந்தேன் மெலிந்தேன் நினைவும்
அழிந்தேன் பரவசமே ஆனேன் - செழுங்கபட

கனவிற் காணுதல்

நெஞ்சிற் கருணையில்லா நிஷ்டுரி யார்தம்மை
வஞ்சக் கனவில் வரக்கண்டேன் - செஞ்சிலம்பு

கொண்டஇரு தாள்மலரைக் கும்பிட்டேன் வெய்யோனைக்
கண்டகம லம்போல் களிகூர்ந்தேன்-தெண்திரைசூழ்

நீதியுல கந்தனிலே நிட்சேபங் கண்டெடுத்த
ஆதுலர்போல் பேருவகை ஆயினேன் - நீதிநெறி

சேரும் வருணகுலா தித்தனையே சேர்ந்துகளி
கூரும் அவர்போல் குறைவற்றேன் - ஆரத்தின்

வண்டல்அணி கொங்கைகளை வாழ்த்தினேன் மங்கை
[நல்லார்
கெண்டை இணைவிழியைக் கீர்த்தித்தேன்-அண்டையிலே
சென்றேன் பராமுகமோ தேவரீர் விண்ணப்பம்
ஒன்றே அதுகேட்க ஒண்ணாதோ - இன்றுமைநான் ௩௯௪

௩அ௭. காமாக்கினி : ஆசை நெருப்பு.

௩அஅ. பரவசம் ஆதல் : தன் வசம் இழந்து பிறர் வழி ஆதல்.

௩அ௯. நிஷ்டுரியார் : கொடுமையானவர்.

௩௯௦. வெய்யோன் ; ஆதவன்.

௩௯௧. நிட்சேபம் : புதையல். ஆதுலர் : வறுமையாளர். உவகை : களிப்பு.

௩௯௨. ஆரம் : சந்தனம்.

௩௯௩. வண்டல் : குழம்பு. கெண்டை : மீன் வகை. இணை : இரண்டு. அண்டை : சமீபம்.

௩௯௪. விண்ணப்பம் ஒன்றே : வேண்டுகோள் ஒன்றுதான். ஒண்ணாதோ : கூடாதா.

Koviloor Digital Library

சற்றே யொருவார்த்தை சம்பாஷித் துக்கொள்ளப்
பற்றிறன்று சொல்லீர் பனிமொழியீர் - பொற்
[றொடியீர் ௧௯௫
எங்கே சருமேனீர் ஏவினது கோட்டமது
பின்னை நினைந்து பிழையேனு - என்றனுடைய
மோகனைய நெஞ்சின் விழிவேல் விளைத்துவரும்
காதல் நிறைக்கும் களஞ்சியமே - சூதுபயில்
சேல்இலங்கு கண்மடவீர் செப்பீர் திறந்தோர்
கால்எளிமை வேண்டாவோ காரிகையீர் - ஏலமலர்
ஏரிலங்கு பூங்குழலீர் என்அருமை என்பெருமை
ஆரறிவார் நீரறிவ தல்லாமல் - நிரைத்
தெளிந்தாலும் ஆருச் செழுங்காமச் செந்தி
அளிந்தால் வலக்காரம் ஆமோ - களிக்கும்
தவலோ கருமயங்கும் தாம நகையீர்
துவலோ துவலொன்றும சொல்லீர் - நவமாம் ௨௦௧

---

௧௯௫. பனிமொழி : குளிர்ந்த பேச்சு. பொற்றொடி. தங்க வளையல்.

௧௯௭. நெஞ்சின் : நெஞ்சிலே. விழி வேல் : கண்ணாகிய வேலாயுதம்.

௧௯௮. சேல் : மீன். திறந்து : வாய் திறந்து. ஓர் கால் : ஒரு முறை. ஏலம் : வாசனை.

௧௯௯. ஏர் : அழகு.

௨௦௦. வலக்காரம் : வெற்றி.

௨௦௧. தவலோகர் : தவ உலகில் வாழ்வார். தாமம் : ஒளி. துவலோ துவல் : சாதலோ சாதல்; நான் சாக வேண்டியதுதானு? "காதல் போயிற் சாதல்" நவம் : புதுமை.

Koviloor Digital Library

விழிபாய வேனொந்தேன் மெல்லியல்லீர் உந்திச்
சுழிபாய்வேன் என்றுதுதி சொன்னோன் - தழுவும் ௬0௨
பொருவாள் விழியாரப் போதுமுகம் பார்த்துத்
திருவாய் மலர்ந்துநகை செய்தார் : பெரிதிங்கு

கனவில் அனுபவித்தல்

இதுவே தருணமென எண்ணிடம் தேடி
மதுவேறு பூங்கா வனத்தில் - உதவியதோர்
வாளை மணிவசந்த மண்டபத்திற் பூங்கமுகின்
பாளை மணங்கமழும் பந்தரிட்டு - நீள ௬0௫
எடுத்து வகையான எல்லையிலா மாலை
தொடுத்துச் சிலபூச் சொரிந்து - விடுத்ததிலே
பாயல் படுத்துப் பரிமளப்பூ மெத்தையின்மேல்
ஆய விரித்ததன்மேல் ஆங்கவரை - சேயபதம்
கன்றுமல் கொண்டேற்றிக் கைகட்டி வாய்புதைத்து
நின்றேன் இருதாளை நீட்டினர் - சென்றந்தக்
கால்கொண்டு பற்றிஇரு கையாரத் தீண்டிஅணை
மேல்கொண்டு நானுமங்கு மேவினேன் - மால்கொண்ட

---

௬0௨. பொரு : போர்வல்ல. அப்போது : அத்தருணம்.

௬0௪. மது ஏறு : தேன்பெருகும்.

௬0௫. வாளை மணி வசந்த மண்டபம் : வாளை மீன் துள்ளும் நீர்நிலை சூழ்ந்த அழகிய இளவேனில் மாளிகை. கமுகு : பாக்கு. பந்தர் : காவணம்.

௬0௭. பாயல் படுத்து : படுக்கை செய்து. ஆய : காம்பரிந்த மலர். சேயபதம் : சிவந்த திருவடி.

௬0௮. கன்றுமல் : கவடுபடாமல். இருதாளை : கால்கள் இரண்டையும்.

௬0௯. அணை : படுக்கை. மால் : மயக்கம்.

Koviloor Digital Library

மைக்குழலை நீவி வகிர்ந்து வகிர்ந்ததிலே
தங்கமது மாலையெலாம் சாத்தினேன் - மிக்கபனி ௬௧௦
நீரில் குழைந்த நிறக்குங் குமக்குழம்பைப்
பூரித்த கொங்கைகளிற் பூசினேன் - வேரிமலர்
இற்பூவை அன்னார்க்கு இதவியகாய்ச் சுண்டையுடன்
கற்பூர தாம்பூலம் கைகொடுத்தேன் - அற்புதமாம்
பாதிச் சுருளெனக்குப் பாலித்து அமிர்ததிலே
போதிக்க லீலை தொடங்கினார் - சீதமலர்
மட்டிலே தோய்குழலார் மாமே கலைநெகிழ்ந்த
மட்டிலே என்னை மறந்தேன்யான் - கட்டிமலர்க்
கைக்குவளைத் துக்கரணக் கட்டளைவட் டத்துறையுள்
புக்கொருமித் தெட்டுவகைப் புட்குரலிட்டு - ஒக்கஎடுத்து
அப்புறமுந் திப்புறமுந் தப்புவிளைத் துப்பரிவைச்
செப்பிநகத் திற்குறியைச் செக்கெனவைத்து-ஒப்பில்எழில்
பற்குறியிட் டுக்கருணைப் பத்மமுகப் பொற்பொளிரப்
பொற்குவடொத் துப்புணரப் புத்தமிர்தந் - திற்குலவிச்

---

௬௧௦. மைக்குழலை : இருண்ட கூந்தலை. நீவி : தடவி. வகிர்ந்து : வகுப்பெடுத்து. மதுமாலை : தேன் ஒழுகும் ஆரம்.

௬௧௧. பூரித்த : பருத்த. வேரி : தேன்.

௬௧௨. இல்பூவை : விடாகக்கொண்ட மங்கை. இதவிய : நலமான. காய்ச்சுண்டை : காசுக்கட்டி.

௬௧௩. பாதிச் சுருள் : கொடுத்ததிலே பாதி வெற்றிலைச் சுருள். பாலித்து : கொடுத்து.

௬௧௪. மட்டு : தேன். மாமேகலை : மகிமை வாய்ந்த ஆடை. மட்டிலே. அளவிலே.

௬௧௫. புட்குரல். : பறவை ஒலி.

௬௧௬. அற்பு : அன்பு.

௬௧௭. பத்மம் : தாமரை. பொற்குவடு : பொன் மலை.

Koviloor Digital Library

பற்பிணைப் பற்றிறுகி சக்ரதலத் துக்கநள் இலக்
கற்றுமதர்த்து ஒத்ததனாக் கச்சவிழப் - பொற்பு ௩௧௮
மிருந்த முலைக்கண் விரல்கொண்டு அதுக்கி
நகத்தின் உறுத்தி நகைத்து - முகத்தை
முகத்தில் அழுத்தி முயக்கி மயக்கி
மிகுத்த நலத்தை விளைத்துச் - சுகத்தில் ௩௨௦
அரத்த நிகர்அத ரத்தை எயிற்றில்
இருத்தி அருத்தி இசைத்துக் - கழுத்தில்இசை
உற்றகர ணத்தில்ஒரு வர்க்கொருவர் ஒத்துவகை
பெற்றதில் அடிக்கடி பிணக்குவர - நற்றுயிலில்
மைத்திலக நெற்றிபுரு வக்கடைநெ றிப்புவர
உய்த்திடுக மூத்தொடுகை உட்புகுத - மெத்திய
கொந்தள பந்தி குலைந்து சரிந்திட
வந்து சுரும்பர வஞ்செய - முந்திய
செஞ்சர ணங்கள் சிலம்பு புலம்பிட
வஞ்சி மருங்குல் வளைந்திட - அஞ்சொலுடன் ௩௨௫
நெஞ்சமும் ஒன்றி நிரம்பிய சங்கிசை
கொஞ்ச இரண்டுகை கும்பிட - விஞ்சிய ௩௨௬

---

௩௧௮. கச்சு : ரவிக்கை.

௩௨௧. அரத்தம் நிகர் அதரம்: ரத்தம்போற் சிவந்த உதடு. எயிறு : பல். அருத்தி : உண்ணச் செய்து.

௩௨௨. கரணம் : கலவி. பிணக்கு : ஊடல்.

௩௨௩. மைத் திலகம் : கறுப்புப் பொட்டு.

௩௨௪. கொந்தள பந்தி : பூங்கொத்தணிந்த கூந்தல் வரிசை. சுரும்பு அரவம் செய : வண்டு ஒலியிட.

௩௨௫. சரணங்கள் : அடிகள். சிலம்பு : நூபுரம். மருங்குல் : இடுப்பு.

Koviloor Digital Library

ஆவியொன்று ஆகம்மூன்று ஆசையொன்று நேசமொன்று
மேவுபஞ்ச பாணதுங்கன் வீறடங்க - வாவும்இன்ப ௩௨௭

மேலணிந்த புண்மழுங்க மேனிளங்கும் வேர்வரும்ப
நிலமன்றல் வீசுமுந்தி நீர்ததும்பக் - கோலமிகும்

மொய்யகலம் மேவிட்ட முத்து வடஞ்சிதறத்
துய்யதிரு மேனி துவட்சிதர - மெய்யுறநான்

ஆரமதன் நூலில் அறிந்தறியாச் சந்தேகம்
சேர அடைவே தெளிவித்துக் - காரிகையார் ௩௩௦

தந்த அநுராக சம்போகம் கொண்டாடி
இந்த்ரபதம் பெற்றவர்போல் இன்புற்றுச் - சிந்தை

துயிலென்று வாட்கண் துருங்கலையைக் காம
வினையென் றறியேன் விழித்தேன் - நனைகமழும்

கண் விழித்தபின் புலம்பல்

சோலையெல்லாம் தேடினேன் சுற்றினேன் காணாமல்
மாலையெல்லாம் கொண்டு வருந்தினேன் - பாலனையார்

அப்போது சென்றஅடி அல்லாமல் பார்த்தளவில்
இப்போது சென்றஅடி யான்காணேன் - மெய்ப்படநான்

---

௩௨௭. ஆவி : உயிர். ஆகம் : உடல். மூன்று : ஒரு பேர். பஞ்சபாண துங்கன் : ஐந்தம்பு மதன். வீறு : பெருமை.

௩௨௯. மொய் : வண்டு மலருக்காக மொய்க்கின்று. அகலம் : மார்பு.

௩௩௦. ஆர : நிறைய. அடைவே : முறையாக.

௩௩௧. அநுராக சம்போகம் : ஆசைப் புணர்ச்சி. இந்த்ர பதம் : தேவேந்திர பதவி.

௩௩௨. நனை : தேன்.

காணாமே யழுந்திக் கனவென்று அறிந்தக்கால்
பிணையிலே ஓடி விழிப்பேனே - பேணி ௨௩௫

அறிவுக்கு இனியார் அகலாமல் கையால்
செறிகத் தழுவி இரேனே - நறுநுதலார்
சீரமுதக் கொங்கையையென் செவ்வாயி னாற்பற்றி
ஆரமுதம் உண்டுபராக் காகேனே - காரிகையார்
ஏயத் தனியே எழுந்தருள இன்னும்அந்த
மாயத் துயில்எனக்கு வாராதோ - நேயமுடன்
மெத்தெனவே நீங்கி விழித்ததுவும் பேசுவதும்
இத்தனையு மோகனமென் றேயறியேன் - சத்தியமே
என்று வருந்தி எரியும் கனல்வாயில்
ஒன்றும் மெழுகாய் உருகினேன் - மன்றல்அணி ௨௪௦

பாயலிலே சற்றே பரிசித்த மாத்திரத்தில்
ஆயிரம்நாள் கூடினர்போல் ஆயினேன் - சேயிழையார்
அன்பும் பெருநலமும் அந்தரங்க மும்பெருக
இன்பம் பெரிதாய் இருந்ததுவும் - துன்பம்
அனைத்தும் தவிர்ப்பவர்போல் ஆட்கொண் டதுவும்
நினைத்துநெடு மூச்செறிந்து நின்றேன் - வினைக்கலகக்
கோபமத னாலே குறையுயிரும் கொள்ளைகொள்ளும்
சாபமத னாலே தயங்கினேன் - சோபமனத்
தொந்த மதியால் தொடர்ந்துபோ தாக்குறைக்கு
வந்தமதி காய மதியழிந்தேன் - சந்ததமும் ௨௪௫

---

௨௩௭. பராக் ஆதல்: ஜாக்கிரதையாக இருத்தல்.

௨௪௦. கனல்: நெருப்பு. ஒன்றும் மெழுகாய்: பொருந்திய மெழுகு போல.

௨௪௪. சாபம்: வில்.

௨௪௫. தொந்தம்: தொடர்பு. மதி: மதிக்கத் தக்க இனிமை. மதி: சந்திரன் மதி: புத்தி.

Koviloor Digital Library

அண்டர் குறைத்தமரம் ஆனேன் அடல்வேழம்
உண்ட விளங்கனிபோல் உள்ளுடைந்தேன் - அண்டிவரும்
தீவாடை யாலே தியங்கினேன் பார்மடந்தை
மாவாடை யாலே மயங்கினேன் - காவில்
செழுந்தென்றல் ஊடாடச் செந்நி லடைவுங்
கொழுந்தென்ற லாலே நலிந்தேன் - கொழுந்தகைய
காளகண்ட வாள்விழியார் கட்டுரைகே ளாச்செவியில்
காளகண்ட ஓசைபுகக் கன்றினேன் - மேளமிகும்
தந்திமருப் பென்னுந் தடமுலையார் காரளக
பந்திமழை காணப் பயிரானேன் - முந்திஅருள் ௪௨0
தாவிப் பொழியுமுகச் சந்த்ரோத யங்காண
வாவிக் குமுத மலரானேன் - பாவியேன்
புண்ணான நெஞ்சுதவிப் போங்காரம் விட்டாலக்
கண்ணால் ஒருவரையுங் காண்கிலேன் - எண்ணில்
விரகாதி மோக வினைவாங் கடலின்
கரையேறு நின்றவழி காணேன் - உருகிமனம் ௪௨௧.

---

௪௧௮. அண்டர் : பகைவர். குறைத்த : வெட்டிய. வேழம் : விளாம்பழத்தைப் பற்றும் ஒரு நோய். அப்பிணி பெற்ற விளங்கனி வெறுங் கூடாக இருக்கும்.

௪௧௯. காள கண்ட வாள்விழியார் : நஞ்சைத் தொண்டையிலே பெற்ற வாள் போன்ற கண்ணார். காள கண்டம் : குயில். கன்றினேன் : துயருழந்தேன். மேளம் : உடைவு.

௪௨0. தந்தி : யானை. மருப்பு : தந்தம். கார் அளக பந்தி : கரிய கூந்தல் நிரை.

௪௨௧. வாவி : தடாகம். குமுதம் : சந்திரனைக் கண்டு மலரும் மலர்.

௪௨௨. போங்காரம் : பெருந் துக்கம். எண் இல் : கணக்கில்லாத.

Koviloor Digital Library

பேராசை கொண்டேன் பிழைக்கும் பொருட்டாகச்
சோராது ஒருநினைவு தோன்றிற்று - சோராகக் ௨௫௪

மடல் ஊர நினைதல்

காமம் உழந்து கலங்கி வருந்தினர்க்கு
ஏமம் மடலல்ல தில்லைவலி - ஆமெனவே ௨௫௫
சொன்னதிரு வள்ளுவரைத் தோத்திரஞ்செய் தேன் (கருத்தில்
உன்னிமடல் ஊர்தற்கு ஒருமித்தேன் - வன்னநறுந்
தாதளவும் செய்யஇதழ்த் தாமரைப்பூங் கண்ணாரைக்
காதளவும் தாவடிபோம் கண்ணாரை - சீதமுலைச்
சூதாரை எல்லையற்ற சூதாரை வள்ளளனும்
காதாரைச் சற்றும்இரங் காதாரை - போதாகம்
செய்யாரை மிக்கமறம் செய்தாரைக் காந்தனெனும்
கையாரை என்னளவிற் கைத்தாரை - வெய்யமயல்
தந்தாரைப் பூங்குழலின் தாராரை மாலளிக்க
வந்தாரைக் கொங்கையின்மேல் வாராரை-சிந்தைவெறும்

---

௨௫௫. "காமம் உழந்து வருந்தினர்க் கேமம், மடலல்ல தில்லை வலி" என்பது குறள். காமத்தினால் தாக்கப்பட்டுத் துன்பம் எய்தினர்க்கு மடலூர்தல் தவிர வேறு வலி இல்லை.

௨௫௬. ஒருமித்தேன் : நிர்மாணித்தேன்.

௨௫௭. தாது : மகரந்தப் பொடி.

௨௫௮. சூது : சூதாடுகாய். சூது : வஞ்சனை. போதாகம் : போத அகம், வரமனம்.

௨௫௯. மிக்க மறம் : பெருங்கொடுமை. கைத்தார் : கசந்தார். வெய்ய மயல் : கடும் மயக்கம்.

௨௬௦. தாரார் : மாலையை அணிந்தவர். மால் அளிக்க : மயக்கம் தர. வாரார் : ரவிக்கை அணிந்தவர். வெறும் : ஒன்றுமற்ற.

கல்லாரை மன்மதநூல் கற்றாரை மெய்ப்புருவ
வில்லாரை ஏழுலகும் விற்பாரை - நல்லபடம் ௬௧

மடற்கோலம்

தன்னிலவர் வன்னெஞ்சாந் தாமெழுதிய மங்கைநல்லார்
என்னுடம் படிவம் எடுத்தெழுதிப் - பின்னர்

சடைகட்டி வெண்ணீறு சாத்திநறும் பூளைத்
தொடைகட்டி வெள்ளெருக்குச் சூடி - உடல்கருக

நெஞ்சதிர அன்றெரித்த நித்தனிவன் என்றுமலர்ப்
பஞ்சசர வேளும் பயப்படவே - விஞ்சமுதச்

செம்பவள வாயார் திருவேளைக் காரனென
அம்பொன்நெடுங் காகளங்கள் ஆர்ப்பவே-கும்பமுனி

சொற்றகைமை மால்விளக்குந் தொல்காப்பியந்
[தெளிந்தே
உற்றபெரி யோர்நாற்பத் தொன்பதின்மர் - நற்றமிழ்நூல்

சேரும் வருணகுலா தித்தன் செழுங்கனகத்
தாருவெனும் கோவை தருமன்அருள் - பேரறஞ்சேர்

---

௬௧. கல்லார் : கல்லைப் போன்ற கடினமானவர். ஏழுலகும் விற்பாரை : எல்லா உலகங்களையும் விற்றுக் கொள்ளத் தக்க எழில் பெற்றாரை.

௬௨. பூளைத் தொடை : இலவம்பஞ்சு மாலை. வெள் எருக்கு : வெள்ளை எருக்கம் பூ.

௬௩. அன்று எரித்த நித்தன்: அந்நாள் எரித்துச் சாம்பலாக்கிய சிவனை. மலர்ப்பஞ்ச சர வேள் : ஐந்து பூங்கணை மாரன். பயப்பட : நடுநடுங்க. விஞ்சு : மேம்பட்ட.

௬௫. வேளைக்காரன் : காலக் கடவுள். காகளங்கள்- வெற்றிச் சின்னங்கள். ஆர்ப்ப : சப்திக்க. கும்ப முனி : அகத்தியன்.

௬௬. சொல் தகைமை மால் விளக்கும் தொல் காப்பியம் : சொல்லாகிய தகுதியில்உள்ள மயக்கத்தை விளக்கிச் சொன்ன தொல்காப்பிய நூல். நாற்பத் தொன்பதின்மர் : சங்கப் புலவர்கள்.

௬௭. செழும் கனகத்தாரு: செழுமையான தங்கமரம்.

Koviloor Digital Library

ஆத்தான போஜன் அனங்கவே ளைத்துறந்தோன்
நாத்தான் இரண்டுரையா நாகரிகன் - காத்தான் ௨௬௮

அருணமலர் மாதுபுணர் அச்சுத ராய
வருண குலா தித்தன் மகிழத் - தருணமயல்

தீர்வேன் பலர்காணத் தென்னாகை வீதியிற்சென் று
ஊர்வேன் பனைமா உகந்து. ௨௭௦

வருண குலாதித்தன் மடல் முற்றும்.

---

௨௬௮. ஆத்தான போஜன் : ராஜசபைக்கு ஏற்றவன். அனங்கவேளைத் துறந்தோன் : காமனை வென்றவன். நாத்தான் இரண்டு உரையா நாகரிகன் : இரண்டு பேச்சு அவனிடம் இல்லை. அவன் நா மாறுது; அவ்வளவு நாகரிகமானவன். யார்? காத்தான் தான்.

௨௬௯. அருணமலர் மாது : செந்தாமரை வாழ் திரு. புணர் : அவள் சேர்க்கை பெற்ற அச்சுதராயனாகிய வருண குலாதித்தன். தருண மயல் : சமயத்தில் பெற்ற மயல்.

௨௭௦. தீர்வேன் : தீர்கின்றேன். பலர் காண: பலரும் அறியும்படி. தென் நாகை வீதியில் சென்று: தென் பாலுள்ள நாகை நகர் தெருவிலே போய். ஊர்வேன்: செலுத்துவேன். பனைமா: பனங்கருக்கால் ஆய குதிரையை. உகந்து: மகிழ்ச்சியோடு.

Koviloor Digital Library